KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்

7 No. 9. 1, 3, 193

M211, N28KN
N34.7.9
199159

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

6- JUN 1934

Vol 7] 1934 ௵ மார்ச் ௴ 1௳ [No. 9

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 129
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 131
3. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 134
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம்பத்து, 4-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 135
5. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு (ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 137
6. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(வேங்கடாச நினு ஸேவிம்பனு)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 139
7. மதுரைக் கோவை. (சேட்படை)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 140
8. கம்பராமாயணம்—(அநுமப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 142
9. வர்த்தமானம் 144

கலாநிலயம்

கல்சரின் அவசியம் 2.

பிரபஞ்சநடமாட்டத்தின் தன்மையும், அதனிடைக் கடவுளின்கருத்து அமைந்திருக்கும் முறையும் அறிவதற்கு ஏற்ற பயிற்சியைத் தரும் சாதனங்களை 'கல்சர்' என்றும், அம்முறையை அறிவதோடு அதனை உலகத்தில் நடத்திவைக்கவேண்டும் என்னும் ஆர்வத்தை அடைவதும் அக்கல்சரின் இலக்கணம் ஆம் என்றும், கண்டதேகாட்சி கொண்டாதே கோலமாய் யாவும் தலைதடுமாறுகின்ற இக்காலத்தில் கல்சர் என்னும் இது பெருகிப் பரவவேண்டுவது மிகவும் அவசியம் என்றும், சென்றவாரம் எடுத்துக்காட்டினோம். இந்தப்பொருளில், பாஷைகளின் அறிவும், பூதசாஸ்திரங்களின் ஆராய்ச்சியும், எந்திரப்பயிற்சி முதலியவைகளும் தம்மட்டில் நின்று கல்சர் என்னும் அந்தத் திவ்வியபதவியை அளிக்கத் தகுந்தனவல்ல. இவைகளையும் இவைபோன்ற மற்றுஞ்சில தொழிற்பயிற்சிக் குரியவைகளையும் பொதுப்படக் 'கல்வி' என்று இக்காலம் வழங்கிவிடுகின்றனராதலாலும், அவ்வாறு வழங்குகின்றகொடுமையாலே 'கல்சர்' என்பதற்கு இணையான பொருளைத் தரவல்ல 'கல்வி' என்னும் இச்சொல் இப்பொழுது இழிவானபொருளை ஒருவாறு அடைந்துவிட்டதாலும், நாம் இங்கு உரைத்துவருகின்ற விஷயங்களுக்கு இவ் விழிந்தபொருள் ஏற்காதாகையால், இப்பொருளை வைத்து அச்சொல்லை மயங்கக் காணநேரிடலாம் என்றவோர் அச்சத்தினாலும், கல்வியென்னும் சொல்லிற்குப் பதிலாகக் 'கல்சர்' என்னும் இவ்வாங்கிலமொழியை உபயோகிக்கலாகின்றோம்.

பெ[illegible]யிலும் என்! கடவுள் கருத்தைச் [illegible]யாகத் தேர்ந்[illegible]ண்டு அதனை நடத்தி வைப்பதற்கு ஏற்றவோர் நிலையை அளிக்கவல்ல தொன்றே வேண்டப்படுவதென்னும் நினைவு யாவரையும் எங்நிமிடம் பற்றிக்கொள்ளலாகின்றதோ அந்நிமிடமே, இத்தகைய கல்சரைப் பெறவேண்டியது மானுட தர்மத்தின்முதல்படித்தாய அவசியம்என்பதுதெற்றென விளங்கும். நாமறிந்திருக்கின்றசமயநெறிகளின்முடிவுகளும் இன்னதே ஆயினும், சமயநூல்களின் பயிற்சியும், அவைகளின் தன்மையை எடுத்து வாதிக்கவல்ல திறமையும் மாத்திரம் கல்சர் ஆகாது. கல்சர் உடையவர்களுக்கே சமய நூல்களில் காணக்கிடக்கும் உண்மைகள் மெய்ப்பயன் அளிக்கும். அவரவர் ஆன்மானுபவங்களின் ஆழத்தினின்று திரண்டெழுந்த முடிவுகள்தாம் மதக்கொள்கைகளாக அனுசரிக்கப்பட்டு வருகின்றன. சமயங்களெல்லாம், முத்திநிலை அவரவர்உள்ளத்திலேயே இருக்கின்றதேயல்லாமல் புறத்திலே ஒன்றுமில்லை என்று சாற்றுவதேபோல், கல்சரும் மாந்தர்களது நல்வாழ்வை உள்ளத்தின் செய்தியாகவே கருதிநிற்கின்றது. மிருகத்துவம் கீழுழுந்த மானுடத்துவம் தலைநிமிர வோங்கலாவதே மனிதருடைய முன்னேற்றமென்பது கல்சரின் முடிவு. "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்" என்பதைத் தெரிந்து எடுத்துக் கூறவல்லது கல்சர். ஏனெனில், மனிதர்களுக்கே சிறப்பாய பெருமையும் செல்வமும் இன்பமும் எனநிற்கும்எண்ணத்தையும் உணர்வையும் செம்மையாய் முழுமையாய்த் திறமையுடன் நடக்குமாறு பெருகி வளரச்செய்வதொன்றே எவ்வெவர் கருமமும் ஆகுமெனக்கல்சர் கண்டுகொண்டிருக்கின்றது. அலகிலாமல் அகன்று அகன்று வளர்

வதால் தாமே யாவுமாய்ப்பரவப்பெற்று,அறிவோடும் அழகோடும் விளங்கவேண்டும் என்கின்ற நோக்கம் வாய்த்தவர்தாமே மக்களாவார். இந்த நோக்கம் வாய்க்குமாறு செய்வதற்கே கல்சர் இன்றியமையாததாகின்றது; கல்வியின் மெய்ப்பயன் அதுவன்றி வேறில்லை. ஒன்றைத் தன் உடைமையாக வைத்து இருப்பது அன்று பூரணமான செம்மை; தான், வளர்ந்து வளர்ந்து ஆவதுதான் அப்பூரணச் செம்மையின் தன்மையாம். இவ்வகையிலும் கல்சரும் மதக்கொள்கைகளின் முடிவும் ஒன்றேயாய் இருக்கக் காணலாம். 'தத்வமஸி(நீ அது ஆகின்றாய்)அனைய மகாவாக்கியங்கள் மறைமுடிவாய் நின்று, ஆகவேண்டியவோர் தன்மையைத் தெரிவிக்கின்றன.அதனைத்தான் எதிர்மறை முகமாக,'விலங்கினின்று மாறி மக்கள் ஆகாதவர் கல்லாதார்' எனத் திருக்குறளும் கல்சருக்குச் சார்பாகக் கூறும். "உளரேன்னும் மாத்திரை அல்லால் பயவாக் களர் அனையர் கல்லாதவர்'' என்று நம் தமிழ்வேதம் சாற்றலாவதும்,"இருப்பதன்று,பயன்படவளர்வதே மானுட தர்மம்'' என்பதுதான்.

சமயாசாரியர்களும்கல்விக்களஞ்சியங்களும் ஆகிய இருதிறத்தோரும் கடவுளின் கருத்து இன்னதென ஓர்ந்தறிந்து உலகத்திற்கு உதவுகின்ற பெருமக்கள். அவ்விருவர்தம் முடிவும் இங்கு ஒன்றேயாக இருக்கக்காண்கின்றோம். அன்னதைத் தாமே உணரவல்லாரல்லா ராயினும் அவர்மொழிகளை வேதமெனக்கொடு நடத்தி வைத்தல் அன்றோ நம்மனோர்கடன். அவ்வாறன்றி அன்னதற்கு மாறாகச் செல்கின்ற சூழ்ச்சியை என்னென் றுரைப்பது! இதனைக் கருத்தில் நிறுத்தி இக்காலம் நிலவுகின்ற இயக்கங்களில் எதனை எடுத்துச்சோதித்தாலும்ஒன்றாவது முழுமுதற்கடவுளின் திருவுள்ளத்திற்கு உகந்ததா யிருக்க இடமில்லாமற் போவதைக் காண இரக்கமுடையார் யாவரே மனம் உளைந்து மாழ்கிடா திருப்பார். எல்லா முயற்சிகளும் எல்லா இயக்கங்களும் ஒன்றை வைத்து இருக்க மன்றுடுகின்றனவேயன்றி, உணர்வும் எண்ணமும் வளர்ந்தோங்கி அழகும் இன்பமுமாய் ஆவதற்கு ஒருநெறி பகர்கின்றன எங்குங் காண இயலவில்லை. வளரத்தானில்லையெனில் இருக்கின்றபடியேனும் இருந்து கழியலாமென அமைந்தாலோ அதுவும் இயலாது. முளைக்காதவித்து அழுகிவிடுகின்றது. விதிசெய்யும்விபரீதம் கொஞ்சமன்று. வைத்து இருப்பதற்கு அவாவுகின்ற பொருள்களும் கிடைப்பதில்லை. கிடைக்குமெனின், கடவுளின் கருத்திற்கு எதிர்நடந்தக்கால் நன்மையொன்றும்வாய்க்காது என்னும்வாய்மை பொய்த்திடுமாகையால் கிடைக்கா திருப்பதொன்றே இயற்கை.

குறைவறநிறைந்து செம்மையுறச்செய்வது கல்சர் ஆதலால், இம் மன்பதைத்தொகுதியில் இன்று இக் கல்சருக்கு ஏற்பட்டிருக்கின்ற அவசியம் அளவற்றதாம். மானுடஇனத்தில் பிறந்த பிறவியின்பயனைநிறைவேற்றிவைக்கின்ற இக்கல்சரின் அவசியத்தை எந்நாளினும் அதிகமாய் இந்நாளில் அறிவுடையோர் காண்பார். அதனினும், இந்நாட்டில் அது செப்பனிட்டுத் திருந்த வேண்டியகாரியம் மிகவும் அதிகமாயிருக்கின்றது. ஏனெனில் இங்கிலாந்து முதலிய நாடுகளில் ஒரு சிலர்தவிர ஏனைய பெரும்பகுதியோர் "விலங்குகளாய் இருந்து திரிவதுதான் வாழ்வு'' என்று வாய்விட்டுச் சொல்லி அதற்கேற்ற முறைகளை அனுசரிக்கின்றனர். மாத்யூ ஆர்னல்ட், ரஸ்க்கின், கார்லைல், எமர்ஸன் போன்று இதற்கு எதிராய்ச் சொன்னவர்கள் பேர்களும் பழங்கதைகள் ஆகிவிட்டன. பின்னர் இன்று, "எந்திரமே எந்தெய்வம்'' என்று சொல்லிக்கொண்டு அவ்வெந்திரத்தில் தமது ஆன்மாவை வைத்து அரைத்துவருகின்றனர். இவ்வாறு அரைக்கின்ற எந்திரத்திலிருந்துவிழுகின்றதிப்பியாம் பணத்தைஇரண்டொருவர் கண்டு தந்தெய்வம்கொடுத்த வரம்என்று கொண்டாடுகின்றனர். இன்னபடி செய்வதால் நாளுக்கு நாள் அவர் நாசமடைந்து வருகின்றன ரென்பதைச் சொல்லவும்வேண்டுமோ. ஆயினும் அவர்கள் ஒருநாள் கண்விழித்துக்கொள்ளினும் கொள்ளலாம். தாங்கமாட்டாத் துன்பம் சுமந்ததும் "ஐயகோ,கடவுளின் கருத்திற்கு முரணாக நடந்து கெட்டோம்'' என்று தேறுவது அவர்களுக்கு எளியது. இந்நாள் இந்தியர் செய்தியோ, புகுந்து உழக்கும் இயக்கங்கள்யாவும் மிருகத்துவத்திற்கு ஏற்றனவா யிருப்பினும் ஒருவரும் மிருகமா யிருக்கவேண்டுமென்பதுதான் தம் கருத்து என்று சொல்வதில்லை. வேண்டுகின்ற முறைகள் அவ்வளவும் அம் மேனாட்டார் கையாளும் முறைகள். நினைக்கின்ற நினைவு அவ்வளவும் அவர் நினைவே. வாழ்வின் நோக்கமும், அந்தரம் பேசில், அவர் நோக்கமே. ஆயினும்,பேசுவ தவ்வளவும் ஆன்மவளர்ச்சியைப்பற்றியும் அன்பைப் பற்றியும் அவையனைய பிறமேன்மையான விஷயங்களைப்பற்றியுமே யாம். பசுத்தோலைப் போர்த்த புலியன்ன பிறரை வஞ்சிக்க இவ்வாறு இவ்வியக்கங்கள் நடைபெற வில்லையாயினும், தம்மையே தாம் மிகக்கொடிய வஞ்சனை புரிந்துகொள்கின்றன- இதனைத் தானோ ஆன்ம வஞ்சனை என்றனர்.—இவ்வியக்கங்களில் ஈடுபடுகின்ற சனங்கள் தாம் ஏதோவோர் உன்னத ஆன்மநிலைக்கு முயல்வதாக எண்ணிக்கொள்கின்றனர். வேண்டுவன எந்திரக் கல்வியே. பர்ஞர்ட் ஷா மொழிந்தபடி, "கொலைபாதகப் பேராசை என்னும் வர்த்தகமும்'' எந்திரமுறையை அனுசரித்து நடப்பதே யாகும். சர்வகலாசாலைகளும் எந்திரமே, அரசியலும் எந்திரம். நாம் கேட்கின்ற 'சுய ஆட்சி' முதலியவைகளும் எந்திரத்தை ஓட்டுவதற்கு யார்யார் 'ஓட்'கொடுத்து மண்டையைத் துகள்துகளாய் உடைத்துக்கொள்ளவேண்டும் என்பதன்றி வேறன்று. விவாகவயதும் எந்திரத்தினுள் கொண்டுவரப்படுகின்றது. மற்றைய சீர்திருத்தங்களும் அவ்வாறே. இன்னவிதம் எல்லாம் எந்திரச்செய்தியா யிருக்க, நாமெல்லாம் ஆன்மானுபவத்தில் ஈடுபட்டிருப்பதாக ஓர் மயக்கம் நம்மனோரைப் பற்றியிருக்கின்றது. அந்தமயக்கம் ஒன்றே மேனாட்டார்க்கும்நமக்கும்உள்ளவேறுபாடு. ஆனல் என்? ஆங்கிலேய நாகரிகத்தை வைதுகொண்டே பின்பற்றினால் விளைவது வேறதாமோ. அவர்கள் அடைகின்ற அக்கதியே நாமும் அடைவோம். எதிர்காலம் ஏன்? அடைந்துகொண்டு வருவதையும்பார்க்கின்றோம். மற்று, முன்சொன்னபடி மேனாட்டார் ஒருநாள் தெளிந்துகொள்ள இயலினும் இயலலாம். இப்படியே செல்வோமானல் பின்னுள் தெளிவதென்பதுதான் நமக்கோ மிகவும் கடினமாய்விடும். துஷ்டத்தனந் திருந்துவதைக்காட்டிலும் அறியாமை திருந்துவது கஷ்டமென்பது அனுபவத்தால்காண்கின்றஉண்மை. விஷத்தை விஷமென்று குடிப்பவனும் கொடுப்பவனும் ஒருசமயம் 'வேண்டா'[illegible]தனது எண்ணத்தை மாற்றினும் மா[illegible]எண்ணிக் குடிப்பவனும் [illegible]பவனும் சாகும்[illegible]

199157

குடித்தே தீர்வான்; கொடுத்தேதீர்வான். தாங்கமாட்டாத் துன்பம் மேன்மேலும் வந்து உறுகின்றபோது, ஏனிது வந்ததென்றுஉணராமல்,"ஆன்மவளர்ச்சிக்கு நாம் முயன்றதால் இந்நிலைக்கு வந்தோம்; கடவுளின் கருத்தை நடத்திவைக்க நினைத்ததால் இக்கதியடைந்தோம்--ஆன்மாவுமாயிற்று,கடவுளுமாயிற்று; இரண்டையுங் கொண்டுபோய்க் குப்பையிற் போடு'' என்ன நேரும். இதற்கும் எதிர்காலம் ஏற்றுக்கு! இந்தக் குரல் சிறிதுகாலமாகக் கிளம்பி யிருக்கின்றதைத் தான் கேட்கின்றோமே.அன்னவரை இகழ்வதில்பயனில்லை; பழிப்பதில் பயனில்லை. அவர்களை இகழ்ந்து பழிப்பவர்களில் பெரும்பான்மையோர்எவ்விதத்திலும் எள்ளளவும் உயர்ந்தவரும் அல்லர். பொய்யான இயக்கங்களுக்கு மெய்ப்பேரிட்டு விவகரித்ததின் தர்க்கத்திற்கியன்ற முடிவு அதுவே இந்தநிலைக்கு வந்துளோரையும், அந்நிலை அவர் அடையுமாறு பலகாலமாய் அடிகோலித் தந்துள்ளோரையும் எண்ணிக் கண்ணீர் வடிப்பார் உலகின்பால் உள்ளன்புடைய பெரியோர்.

கண்ணீர் வடிப்பினும் முற்றிலுங் கையற்றுநின்று கலுழவேண்டா. இத்தகைய அரியநிலையிலிருந்து ஜனங்களைக்காக்கவல்ல கல்சர் என்னுமக் கைகண்டமருந்தொன்றுஉளது. அத்தத்துவ அமுதை அள்ளியள்ளியருந்தினால் எத்தகையபித்தமும் தெளியும். கடவுளின் கருத்தை நடத்தி வைப்பதாகச் சொன்னாற்போதாது. அக்கருத்து யாவதா யிருத்தல்கூடும் என்பதையும் முன்னர்த் தேர்தல்வேண்டும். இக்கருத்தைச் சரித்திரங்கள் எழுதி வைத்திருக்கவில்லை. வேதங்களையுஞ் சாத்திரங்களையும் படித்தவளவிலும் அது தெரிந்துவிடமாட்டாது. பிறர் எவ்வளவுதான் சொல்லிக்காட்டினாலும் உணர இயலாது. பகுத்தறிகின்ற மனப்பயிச்சிஇதனை அறிவதற்கு அவசியமெனினும், அது வொன்றுமேயும்போதாது. அதன்மேல் மனோபாவமும்வேண்டும். பகுத்தறிவும் மனோபாவமும் இரண்டறக்கலந்துஒருங்கே அளிப்பது கல்சர் இக்கல்சர் இலாதார் தம் உடல் பொருள் ஆவியை அளிக்க முன்வரினும் எதற்காக அளிக்கின்றார் என்பதை உணராமல், கடவுளுக்கென்றும் தேசத்திற்கென்றும் எண்ணிக்கொண்டு, இரும்பு எந்திரத்திற்கும், பள்ளிக்கூட எந்திரத்திற்கும், ஓட்டு எந்திரத்திற்கும், ஒன்றுமில்லா நாக்கு எந்திரத்திற்கு மவைகளை உகுத்துவிட்டுப் போகலாகின்றனர்.

இவையாவும் நாம் மிகுதிபற்றிச் சொல்கின்ற வாசகங்களே என்று கூறவும் வேண்டுமோ! கல்சரின் தரம் தெரிந்தவர் சிற்சிலர் முயற்சியின்றிஇந்நிலையில்சும்மா அமைவரேனும், எல்லோரும் போகும்நெறி தாமும் போதலேனும் தருமம் அன்று. கல்சரின் தனிப்பெரும் நிலையை எடுத்துரைத்து யாவரும் அதனை ஏற்கவும்,ஏற்று அடையுமாறும் செய்வது இக்காலத்தில் சுலபமன்றெனினும் விடாமுயற்சியுண்டெனின் அது வீண்போகாதென்பதும் திண்ணம். அந்தத்தில் இவர்களே தனக்கு உற்றதுணையாயினரென்று உலகம் ஒருநாள் உண்மையாக மதிக்கும்.

தமிழ்ப்பாடம் 109.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[118-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

வெம்புயவீ மனும்வெகுண்டு மீண்டுமிவை
யெடுத்துரைப்ப மேக மேனிப்
பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந்தாமன்
கருணையுடன் பரிந்து நோக்கி
அம்புவியின் முன்பிறந்தோ ரரசுநெறி
முறையுரைத்தா லதுகே ளாமற்
றம்பியரு மறுப்பரோ தலைவவினிக்
கடுங்கோபந் தணிக வென்றான் 18.

தமையனுக்கு எதிர்பேசுதல் தகுதி அன்று என்று கண்ணன் வீமனை அமர்த்துதல்.

பதவுரை.

வெம் - கொடிய, புயம் - புயங்களையுடைய, வீமனும் - வீமசேனனும், வெகுண்டு - கோபங்கொண்டு, மீண்டும் - மறுபடியும், இவை - இவ்வார்த்தைகளை, எடுத்து உரைப்ப - எடுத்துச் சொல்லவும் (அவனை)

மேகம் - மேகம்போன்ற, மேனி - சரீரத்தையும், பைம்பொன்-பசும் பொன்னாலாகிய, நெடும்-பெரிய, தனி - ஒப்பற்ற, திகிரி - சக்ராயுதத்தையும் உடைய, பரந்தாமன்-கிருஷ்ணன், கருணையுடன் - அருளோடு, பரிந்து - இரங்கி, நோக்கி - பார்த்து,

அம் - அழகிய, புவியில் - உலகத்தில், முன்பிறந்தோர்-முதல் பிறந்த தமையன்மார், அரசு-அரசிற்கு உரிய, நெறிமுறை-தர்மமுறைமைகளை, உரைத்தால்- சொல்லும்போது, தம்பியரும் - இளையவர்களாயிருப்பவரும், அது - அச்சொற்களை, கேளாமல் - கேட்டு இணங்காமல், மறுப்பரோ - மறுப்பது உண்டோ ! (ஆகையால்)

தலைவ - தலைவனே, இனி - இனிமேல், கடுங் கோபம் - உன் கொடிய கோபத்தை, தணிக - தணித்துக் கொள், என்றான் - என்று (கிருஷ்ணன்) கூறினான்.

விரிவுரை —பிள்ளையையுங்கிள்ளித்தொட்டிலையும் ஆட்டுகின்ற மாயஞ் சிறிதுபுரிகின்றான் கண்ணபிரான். "நஞ்சுதனைமிக அருந்தினோர்நன் மருந்தும்மந்திரமும் நாடவேண்டுமாகையால் எமக்கு என்னஉபாயம்கூறுகின்றாய்'' என வினவிய தருமனை நோக்கி, 'ஐவராம் அவனிபர்க்கு நினைவேது' என்றுகேட்டவளவில் அப்பாண்டவர்கருத்தையே தான் நிறைவேற்றக் காத்துக் கொண்டிருப்பவன்போலப் பாவித்தான் கண்ணன். அதன்மேல் தருமன் போரொன்று புரிதலின்றி,கைரவமும் தாமரையும் கமழ்பழனக் குருநாட்டில் அத்துரியோதனதிபர்களுடன் கலந்துவாழச் சந்துபட உரைத்தருள வேண்டவே, பூபாரம் தீர்க்கவே பிறந்திருக்கின்ற இப் புயல்வண்ணனுக்கு இது பொருந்தாதாகையால், அவ்வாறு செய்யின், "பூதலத்தோர் ஏசாரோ, புகன்றபெருவஞ்சினமும்பொய்த்திடாதோ,நீதியோ'' என வன்மையோ டுரைக்கையில் பாண்டவராம் பிள்ளைகள் கிள்ளப்பெற்றனர். ஆயின், இனித் "தூதுசென்றும் அவர் இணங்கி வாராராகில் போர்புரிவென்''

என்று முழங்குவான்போல் துவக்கிய தருமன் ஐந்தூரிலும், அவையும் மறுத்தால் ஐந்து இல்லத்திலும், தன்குரலை ஒடுக்கிவிட்டான். பெரியதாக ஆரம்பித்துப் பிறகு படிப்படியாய்ச் சென்றுதேய்ந்து இறுவதற்குத் தெலுங்கில் 'பஞ்சபாண்டவலு மஞ்சங்கால் போல முக்குரு'' என இரண்டு விரல்களைக்காட்டிப் பின் அக்கணக்கைத் தரையிலே விரலால் ஒன்றுஎழுதி, அதையும் அழித்துவிடுகின்ற வழக்கினை ஒக்கும். பாண்டவர்கள் இன்னுரென்று தெரியாத ஒருவனைப் பஞ்சபாண்டவர்கள் எத்தனைபேர் என்று ஒரு குறும்பன் கேட்க, அவ்வறிவிலி தனக்கு யாவும் தெரிந்த பாவனையில் 'பஞ்சபாண்டவர்கள் எனக்குத் தெரியாதோ' என்னும் ஒரு தொனியில் துவக்கினுனேனும், அவன் மனத்துளே சந்தேகம் சிறிதுண்டாக அதனைத் தெரிவித்தற்குக் கட்டிற்கால்களை உதாரணமாகக் கூறப்புகுந்தனனுய், அதனைக் கூறி முடிப்பதற்குள் சந்தேகம் வன்மையுறவே, 'பஞ்ச' பாண்டவர்கள் கட்டில் கால் போல நால்வர்' என்றேனும் சொல்லத்துணியாமல் மூவர் என உரைத்தனன். உரைத்ததை உரைக்குமளவில் நிச்சயம்தளர்ந்து மூன்று என்று வாயால் சொல்லிக்கொண்டே இரண்டு விரல்களைக் காட்டுங்கால், பஞ்சபாண்டவர்கள் இரண்டு பேர்கூட ஆவாரோ வென்றயிர்த்து இரண்டு என்று விரலினுல் காட்டிய கணக்கையும் தரையில் கோடு ஒன்றே கிழித்து உணர்த்தலாயினன். கணக்கினது ஐயமோ முன்னினும் வன்மையுறக் கிழித்தவொன்றையும் அழித்துவிட்டான் என்பர். இவ்விதம், ஐந்து பாண்டவர்கள் நான்கு கால்களுடைய கட்டில்போன்றவர்கள் ஆகி மூன்றென மொழியப்பட்டு, இருவிரல்களால் குறிக்கப்பெற்று ஒன்றேயாய் எழுதப்பெற்று இறுதியில் அதுவுமின்றிக் கணக்கழிந்துபோய சரிதையை அந்த ஆந்திரவாக்கியம் சித்தரிக்கின்றது. இவ்வழக்கு, அதிகம்செய்வதாகவேனும் தருவதாகவேனும் வாக்களித்துப் பின் வரவரக்குறைத்து ஒன்றுமின்றித் தீர்கின்ற இயல்புடைய மாந்தரைப் பரிகசித்துப் பயில்வதற்கு உதவியாவதை யாவரும் உணர்வர். அவ்வுதவிக்குத் துணைநிற்கும் அப்பாண்டவர்களில் மூத்தவன், பகைவர்களுடன் "செய்ய வளைக்குலமும் வலம்புரியும் மிக முழங்க,வெய்யகாலன் மாதுாதர் மனங்களிக்கப்பொருதெனினும், தனது "தாயமும் அரசும் வசையில்லா வகைப் பெறுவன்'' எனப் புலிபோல் கூவிய கட்டுரை, 'புனல்நாட்டின் பாதிவேண்டு, அவை யில் எனில் ஐந்தூர்வேண்டு, அவையில் எனில் ஐந்து இலம்வேண்டு, அவை மறுத்தால் அடுபோர் வேண்டு'' எனப் பூசையின் ஓசையாய்த் தேய்ந்து முடிந்தது. வெகுண்டனன் வீமன். கண்ணபிரான் முன் போர் தூண்டியஉரைகளினின்று அவன் தன்சார்பு நின்றனன் என நினைத்தனன். ஆதலின் "ஊனமிலான் மானமிலா துரைப்பதற்கு என்செய்வது''என்றும், "அன்னுனுடன் பிறந்தேனே புன்விதியேன்'' என்றும், இழிவுற உரைக்கத் துணிந்தனன். அவனுக்குப் பல நீதிகளைத் தருமன் எடுத்து உரைக்கவே தான் அதற்கு இணங்கிஅடங்கினவன்போல்,ஆயின் 'அவ்வாறேசந்துசெய்யக்கண்ணனல்லாதுஎன்னை அனுப்புக' என்றுசொல்லப்புக்கவளவில், மடப்பாவை வரமும் தன்வரமும் வழுவாவண்ணம் அக்காரியத்தை முடிப்பதாகத் தன் வஞ்சனைப் பரிகசத்தை வெளிப்படுத்தினுன் தமக்காகத்திருமால் நின்ற நிலையினது நினைவே அவனுக்கு இத்துணைத் துணிவையுங் கொடுத்தது. உடனே அத்திருமால் அத்துணிவினைத் தணிப்பவராகி, அம் புவியில் முன் பிறந்தோர் அரசு நெறிமுறை யுரைத்தால், அதுகேளாமல் தம்பியர்மறுப்பரோவென,வீமனைக்கடிந்துரைத்தார். மாமாயன் இவன்செய்கை தேர்ந்திடார் அச்சிறுவர். வீமன் இவ்விதம் வாய் அடங்கவேண்டி நேர்ந்ததைக் கண்டிருந்தும், விசயன் வாளாவிருத்தலன்றித் தன் கருத்தை யினி விளம்பலுற்றுன்.

மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
திருமதலை வணங்கி நின்று
முக்காலங் களுமுணரு முகுந்தனுக்கு
முதல்வனுக்கு மொழிவான் மன்னே
வக்காலம் பொறுத்தவெலா மமையாம
லின்னமிருந் தறமே சொன்னு
லெக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங்
குழன்முடிக்க விருகின் றுளே. 19.

தருமனது கருத்திற்குத் தான் இணங்காமையை விசயன் சொல்லத் துவக்குகின்றுன்.

பதவுரை.

மைக்கால - கார்காலத்து, முகில் - மேகத்தை, ஊர்தி - வாகனமாகவுடைய, வானவர்கோன் - தேவேந்திரனது, திரு - அழகிய, மதலை - புத்திரனுகிய அர்ச்சுனன்,வணங்கி நின்று-எழுந்திருந்து வணங்கி, முக்காலங்களும் - மூன்று கால நிகழ்ச்சிகளையும், உணரும் - அறிந்திருக்கின்ற, முகுந்தனுக்கும் - கண்ணபிரானுக்கும், முதல்வனுக்கும் - தன் தமையனுகிய தருமனுக்கும், மொழிவான் - பின்வருமாறு சொல்லலானுன். (மன்-ஒ—அசைகள்.)

அக்காலம் - திரௌபதியைத் துகிலுரிந்த அந்தக் காலத்திலே, பொறுத்தவெலாம் - நாம் பொறுத்துக் கொண்டிருந்தன எல்லாம், அமையாமல் - போதாமல், இன்னம் - இப்பொழுதும், இருந்து - முன்னிருந்தபடியே இருந்து, அறமே சொன்னுல் - (வஞ்சினமும் சேவகமும் கருதாது) தருமத்தையே சொல்லிக்கொண்டிருந்தால், எக்காலம் - எந்தக்காலத்தில் நாம், பகைமுடித்து - பகையைத் தீர்த்து......

திரௌபதியும் - திரௌபதியும், குழல் முடிக்க - தனது கூந்தலை முடித்துக்கொள்ள, இருக்கின்றுளே- நெடுங்காலமாகக் காத்துக்கொண் டிருக்கின்றுளே.

விரிவுரை:—"எக்காலம் பகை முடித்து'' என்று சொல்லிவருகையில், வாக்கிய அமைப்புப் பிறழ்ந்து, குழல் முடிக்க விருக்கின்றுளே, என முடிகின்ற இவ்வழகு கருதத் தக்கது.

எக்காலம்......முடித்து...இருக்கின்றுளே எனச் சொற்கள் நேருறச் சேரவியலாமை யாவர்க்கும் புலப்படும். உற்றெழுந்த அர்ச்சுனன் உரைத்துவருங்கால் திரௌபதியின் தோற்றம், அவள் உற்ற இழுக்கோடு அவிழ்ந்து அலைந்த கூந்தலால் தன் கண்முன் தோன்ற, உளம் துடித்து உரைமாறிய பெற்றி யிது ஷேக்ஸ்பியரின் நாடகத் திறமையையே ஒக்கும்.

தீண்டாத கற்புடைய செழுந்திருவைத்
துகிலுரியச் செயலொன் றின்றி
நீண்டானே கரியானே நிமலாவென்
றாற்றினளாய் நின்று சோர

மாண்டார்போ லதுகண்டு மன்னவையில்
யாமிருந்த மாசு தீர
வேண்டாவோ வேண்டுவது மேம்படுநல்
லறமேயோ வேந்தர் வேந்தே. 20.

தேவராயினும் அசுரராயினும் யாவராயினும் வெல்லுகின்ற ஆற்றல் தன்னிடத்தில் உளதென்று அர்ச்சுனன் விளம்பிக்கொண்ட செய்யுளொன்று இதன் முன் விடப்பட்டுளது. இதனில் அறத்தைக் காப்பதைக்காட்டிலும் தம் மானத்திற்கு உண்டான மாசினைத் தீர்க்கவேண்டியதே முக்கியமெனச் சாற்றுகின்றுன்.

பதவுரை.

தீண்டாத - ஒருவராலும் தீண்டத்தகாத, கற்பு உடைய - கற்பை உடைய, செழும் - வளம் மிகுந்த, திருவை - லக்ஷ்மியை ஒத்த திரௌபதியை, துகில் உரிய - துரியோதனுதியர் ஆடையைப்பற்றி நீக்கவும், செயல் ஒன்று இன்றி-யாதொன்றும் செய்ய ஆற்றுமல், நீண்டானே - உலகெலாம் அளப்பதற்கு வளர்ந்தவனே, கரியானே - கருநிறமுடையவனே, விமலா - மாசிலாத் தூய்மையோனே,என்று அரற்றினள் ஆய்- என்று கதறினவள் ஆகி, நின்று சோர - ஆற்றுமல் சோர்வடைய, அதுகண்டு-அதைப்பார்த்தும், மாண்டார்போல் - செத்தவர்களைப்போல,மன் அவையில்- அரசர் சபையில், யாம் இருந்த-நாமெல்லாம் சும்மா இருந்த,மாசு - குற்றமும் பழியும்,தீரவேண்டாவோ- நாம் தீர்த்துக்கொள்ள வேண்டுவதில்லையோ.

வேந்தர் வேந்தே - அரசருக்கு அரசனே, வேண்டுவது - நமக்கு இப்பொழுது வேண்டியிருப்பது, மேம்படு-மிகச்சிறந்த, நல் அறமேயோ - நல்ல அறமே தானே (கூறுவாய்).

விரிவுரை:—வீமனைப்போல் விசயனும் தாமுற்ற பரிபவத்தையே நினைத்துப் பெரிதும் கவல்கின்றுன். வெல்வதற்கேற்ற ஆற்றலுமுளது; வென்று தீர்க்கவேண்டிய பழியும் உளது. எனின், எதற்கென்று இத்தருமன் இன்னுந் தாழ்கின்றுன் என்பது அவன் தம்பியருக்கு விளங்கவில்லை. வெல்வதற்குத் திறமை இல்லாதபோதன்றே மெல்லமெல்லத் தருமங்கள்பார்க்க வேண்டும்என்று கருதிய அர்ச்சுனன் வீமனைப்போல் தனது ஆற்றலைத்தெரிவித்து, "இனி மாசுதீரும்வகை தேடவேண்டுமே யன்றி நல்லறம் ஒன்றும் வேண்டப்படுவதில்லை'' என்று சாற்றினுன்.

இலக்கணம்

நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழி முதலில் வல்லினமும் வரப் புணர்வது எங்ஙனம் எனும் விதிகளை இனிக் கற்போம். இதனேடுயகர ரகர ழகர மெய்களை ஈற்றிலே உடைய நிலைமொழிகளோடு வருமொழிமுதல் வல்லினம்புணர்வதற்கு உரிய விதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஏனெனில், உயிரீருயிருப்பினும், ய் ர் ழ் என்ற மெய்யெழுத்துக்களில் ஒன்று ஈறு யிருப்பினும் விதிகள் வேறுபடுவதில்லை.

காய் சேய் செய் பேய் பெய் பாய் நாய் வாய் மெய் பொய், என்பனபோல் ய் என்னும் மெய் எழுத்தை யீற்றிலுள்ள சொற்களும்; வார் தார் பார் பகர் நகர் புகர் நிகர் துவர் பயிர், என்பனபோல் ர் என்னும் மெய்யெழுத்தை யீற்றிலுள்ள சொற்களும்; ஊழ் கூழ் வாழ்போழ் புகழ் பறழ் கமழ் அகழ் தமிழ் என்பனபோல் ழ் என்னும்மெய்யெழுத்தை ஈற்றிலுடைய சொற்களும் தமிழில் இருக்கின்றன. வருமொழி முதல் வல்லினத்தோடு நிலைமொழியிறுதி உயிர் எவ்வாறு புணருமோ அவ்வாறே இந்த ய் ர் ழ் என்னும் மெய்களும் நிலைமொழி யீருக இருக்கும்போது புணர்கின்றன.ஆகையால் இவை இரண்டு வகுப்புக்களையும் ஒன்றுய் எடுத்துக்கொள்வோம். இதுவுமன்றி, நிலைமொழிஈறு குற்றியலுகரமாயிருப்பினும்,சிற்சிலசிறப்பு விதிகளால்வேறுபடுவதுதவிர பெரும்பான்மை, அதுவும் இவ்விதிகளுக்குள் அடங்குமாதலால்,அக்குற்றிய லுகர ஈற்றையும் இதனேடு சேர்த்துக்கொள்வோம். நிலைமொழியிறுதியில் உயிரேனும், யகர ரகர ழகர மெய்களேனும் நிற்க வருமொழி முதலில் க ச த ப என்னும் வல்லின எழுத்துக்களில் ஏதேனும் ஒன்று வருமாயின் (வல்லினத்தைச் சேர்ந்த ட, ற என்னும் மற்ற இரண்டு எழுத்துக்களும் தமிழில் மொழிமுதல் வாரா)எந்தவல்லினம் வந்துளதோ அதேவல்லினமெய் சிலபோது மிகுந்தும், சிலபோது மிகாமலும் புணரும் என்பது பொதுவிதி. இப்பொழுதுதான் மிகும் இப்பொழுதுமிகாது என்பதை விதிகளுக்குள் சிறப்பாக வரையறுத்துச் சொல்லிவிடலாமாயினும் சிறுபான்மைஇவ்விதிகளுக்குள் அடங்காமற்சிலவழங்கப் பெறுவதும் உண்டு. அவைகளை ஆன்றோர் வழக்கைக்கொண்டுதான் யாரும் தெரிந்துகொள்ளவேண்டும். எனினும் இவ்விதிகளைக் கூடியவரையில் ஒரொழுங்குபடுத்தி இங்கு எழுதுவோம். தமிழ் எழுதுவதில் நேர்கின்ற பிழைகளில் அதிகம் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் விடுத்தலும், மிகக்கூடாத இடத்தில் மிகவைப்பதும் போன்றவைகளே ஆகின்றன. ஆகையால் இவ்விதிகளை நன்கு கற்றல் நலம்.

வல்லின மெய் மிகுவதும் மிகாததும் பெரும்பான்மை நிலைமொழியும் வருமொழியும் சேர்ந்து ஆகின்ற தொடரைப் பொருந்தியே யிருக்கும். ஆகையால் ஒவ்வொரு தொடராக எடுத்துக்கொண்டுவிதிகளைச்சொல்லிவருவோம்:—

A. எழுவாய்த் தொடர்

பூனை சீறியது, நகர் பெரிது, ஊழ் கொடிது, பொய் தீது, குருதி சிந்தியது, பாம்பு கடிக்கும், ஒருத்தி சொன்னுள், என்பனபோன்றவை எழுவாய்த்தொடருக்கு உதாரணமாகும். இதனில் நிலைமொழி எப்பொழுதும் முதல்வேற்றுமையி லிருக்கவேண்டும்.

பொதுவிதி:—உயிர் அல்லது ய் ர் ழ் என்ற மெய்களை ஈற்றில்பெற்ற நிலைமொழி, முதல்வேற்றுமைச் சொல்லாயிருக்குமாயின் அதனேடு புணர்கின்ற வருமொழி முதல் வல்லினமெய் மிகாது. உதாரணம்:—

மதி + தவழ்ந்தது = மதி தவழ்ந்தது.
குதிரை + கனைக்கும் = குதிரை கனைக்கும்
கதவு + திறந்தது = கதவு திறந்தது
கிளி + கூவியது = கிளி கூவியது
நாய் + செத்தது = நாய் செத்தது
தேர் + பெரிது = தேர் பெரிது
புகழ் + பரவியது = புகழ் பரவியது.

குறிப்பு:—ஒருத்தி + சொன்னுள், என்பது எழுவாய்த்தொடராகையால் வலி மிகாமல், ஒருத்திசொன்னுள் என்றே புணரும்.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[116-வது பக்கத் தொடர்ச்சி]

5 கந்தன் வருவும் அந்தகாரக் கழிவும்

ஆகையால், சூரபன்பன்செய்த அதருமமான காரியம் யாது? அவன் நிலையிலிருந்து பார்த்தால், தேவர்களைச் சிறையிலிட்டது குற்றமாகுமோ? வீரவாகுதேவரைநோக்கி, சூரபன்மன்பின் வருமாறுசெப்பினுன்:—

விறலின் மேதகு மவுணராம் வலியிலார் மிகவும்
வறிய ராகிய தேவரா மேலவர் மழலைச்
சிறுவ ராந்தனி முதல்வற்கு மமைச்சியல் செய்வா
ரெறியு நேமிசூ ழுலகத்து வழக்கநன் றிதுவே.!

நறைகொ டார்முடி யவுணர்தங் குலத்தினை நலித்து
வறுமை செய்தனர் கடவுள ரவர்திரு மாற்றிக்
குறிய வேவலுங் கொண்டன னெழுக்கமுங் கொன்றேன்
சிறையும் வைத்தன னேங்குடித் துயர்முறை செய்தேன்.

தப்பல் செய்திடி மகபதி முதலினோர் தமையு
மிப்பதிக்கணேகொணர்ந்தனன் சிறைசெயவிருந்தேன்
கைப்பு குஞ்சிறை விடுவனோ விடுகிலன் கண்டாய்
ஒப்ப ருந்திறற் சூரனென் றொருபெய ருடையேன்.

கந்தபுராணம் - அவைபுகு படலம் - 114, 115, 117.

எனவே சூரபன்மன் செய்த காரியம், அவன் குலமுறைக்கு அடுத்த அறமேயாகும். உலகம் ஆரம்பித்ததுமுதல் வானவர்க்கும் தானவர்க்கும் விடாப் பகையுண்டு. ஆகையால் ஒருவர்மேலொருவர் ஓயாப் போர் தொடுப்பதும் துன்பம் விளைவிப்பதும் சாதாரணமாயிருக்க, சூரபன்மன் தேவர்களைப்பிடித்துச் சிறையிட்டதற்காக முழுமுதற் கடவுள் ஒருதலைச் சார்பாய்ச் சண்முகக் கடவுளை ஏவியது சாமானிய தருமநோக்கில் பொருத்தமான காரியமன்று. விசேட தர்மநோக்கமுடன் இதைக் கவனித்தாலன்றி இதன் உண்மை விளங்காது:—

சூரபன்மனோ கேவலமான அரக்கனல்லன், காசிப மகாரிஷியின் புதல்வன். வீரவாகு சூரனை நோக்கிப் பின்வருமாறு சொன்னார்:—

தாதை யாகியோன் காசிப னுங்கவன் தனய
னுத லானுனக் கமரரைச் சிறை செய்வ தறனோ
வேத மார்க்கமும் பிழைத்தனை சிறுபொருள்விழைந்
நீதி யாலுல களிப்பதே யரசர்தங் நெறியே. [தாய்

—அவைபுகு படலம்—102.

ஓ சூரபன்மா! நீயோ சிறந்த தவங்கள் செய்தவன். ஆதலால் வேதமார்க்கம் இதுவென நீ அறியாதவன் அல்லன். அவ்வாறு நீ யறிந்தும் வைதீக மார்க்கத்தைக் கடைபிடித்தொழுகாமல், அல்ப விஷயங்களில் மனஞ் செலுத்தினுய். இதன்றியும் அசுரர்கள் தேவலோகத்திற்குச் சென்று தேவர்களுடன் போர்செய்து அவர்களை வருத்துவதுண்டு. நீ அவ்வாறு மாத்திரம் செய்யாமல் உம்பரைப் பூமியிற் சிறையிட்டு வருத்துவது உனக்கு அழகாகுமோ? என்பர்.

மெய்மை நீங்கியே கொலைகள வியன்றமே லுள்ள
செம்மை யாளரைச் சிறியே யணங்குசெய் தீயோர்
தம்மி லாற்றரும் பழிசுமந் தொல்லையிற் றமரோ
டிம்மை வீடுவ ரெழுமையு ந்துயரினு டிருப்பார்.

இங்ங னந்திரு நீங்கியே துயருழந் திறப்ப
ரங்ங னம்பெரி தாரிருண் மூழ்குவ ரதற்பி
னுங்ங னம்பிறந் தயருவ ரென்றுமீ துலவா
ரெங்ங னுய்வரோ பிறர்தமக் கல்லல்செய்திடுவோர்.

தீது நல்லன வாயிரு திறத்தவுந் தெரிந்தே
யேதி லார்க்கவை செய்வரேற் றமக்குட னெய்தும்
பேதை நீரையா யமரரைச் சிறைசெய்த பிழையான்
மாது யர்ப்பட லன்றியே யிறுதியும் வருமால்.

-அவைபுகு படலம் - 104-106.

ஆகையால் நன்மைதீமைகளை நன்குணர்ந்தவனுகிய சூரபன்மன் தேவர்களைச் சிறையில்அடைத்தது, அறியாமையுடையபேதையர்செய்கையைப்போல் கருதப்படாது. இந்தக்காரியம்பெருங்குற்றமாகவேஎண்ணப்படும் என்பதை வீரவாகுதேவர் வற்புறுத்துகின்றார். அவ்வாறு விளக்கியும் பிடிவாதமாயிருந்த சூரபன்மனைச் சம்மரித்தது கடவுள் அவனுக்கு அன்பால் செய்த நன்மையேயாகும். இதை நம்பியாரூரர் "காதலாற் கடற்சூர் தடிந்திட்ட செட்டி" யென்று முருகக் கடவுளைக் குறிப்பிடுதல் காண்க:—

ஒட்டி யாட்கொண்டு போயொளித் திட்ட
வுச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிரு டன்னைப்
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்றெளி தன்னைக்
காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
வாரூ ரானை மறக்கலு மாமே.

சுந்தரர் - திருவாரூர் - பண் - தக்கேசி - 10.

குமாரக்கடவுள் சூரனைச் சம்மரித்தது அவன்பால் கொண்ட யாதொருதுவேஷத்தாலும் அன்று. அவன் போனபோக்கிலே அவனை விட்டுவிடுதல், அவனுக்கு நன்மைபயக்காதென்று எண்ணியேதான் அவனையும் அவன்பந்துக்களையும்கொன்றனர். ஆகையால் சூரபன்மனைத் தடிந்தது கருணைச்செயலேயன்றிவேறில்லை. ஆயிரத்தெட் டண்டங்களுக்கும் ஏகசக்ராதிபதியாய் ஆண்டும், அதில் சிலகாலத்திற்குப் பின்னர் வெறுப்புத்தோன்றாமல் "பொக்க வாழ்வினில்" ஆழ்ந்து மேலுமேலும் பிறவிகளுக்கே இடந்தேடிப் பாவவினைகள் செய்யும் சூரபன்மன் சிவபக்தனுகவும் இருந்ததால் அவன் அவ்வாறு கொடிய பிறவியில் உழலா வகையாகவும், தேவர்களின் நெடிய துயரம் நீங்குமாறும் முருகவேள் தமது வேலாயுதத்தால் சூரனை இருபிளவாக்கிஒருபாகமானமயிலைத் தனக்குவாகனமாகவும், மற்றொருபாகமான சேவலைக் கொடியாகவும் கொண்டது பெருங் கருணையன்றோ? இதை மனத்தில் எண்ணி, தம் நெஞ்சத்திற்குப் புத்திபுகட்டுவதுபோல், நம்பியாரூரர் பின்வரும் பாசுரத்தில்,

வேந்த ராயுல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்தவிவ் வுடலிது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயருழந் திடுமிப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையி லாட்டுகந் தானைப்
பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட

சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச்சென் றடைமனனே

சுந்தரர் - திருத்தினை நகர் - பண் - தக்கேசி-15.

எனச் செப்புதல் காண்க.

ஆகையால், சூரபன்மன்மீது முருகக்கடவுள் படையெடுத்து வந்து அவனை அழித்தது கிரேதாயுக மாதலாலும், அக் காலம் தருமதேவதை நான்கு கால்களாலும் நடக்குஞ் சிறந்த காலமா யிருந்ததாலும், அந்நாளில் கல்வி, கலை, தவம், சக்தி முதலியன செவ்வனே பெற்றிருந்த சூரபன்மன், தேவர்களை மேலுலகத்தினின்று பிடித்துத்தன்னுடைய நகரத்திற்குக்கொணர்ந்து சிறைவைத்து ஈனத்தொழிலைச் செய்யவைத்தும், பிரமதேவனைப் பஞ்சாங்கஞ் சொல்லவைத்தும் நடலை வாழ்வின் சிற்றின்ப போகங்களில் ஆழ்ந்து கிடத்தல் அவனுக்குத் தகாத காரியமென்றும், அவ்வாறு செய்ததால் அரசனெவ்வழி குடிகள் அவ்வழி யென்பது போல, அவன் ஆட்சியிலுள்ள உலகமெங்கும் அஞ்ஞானம் பரவி, உண்மைப்பொருளை அடைய விரும்பாததுமன்றி அதனை நினைப்பதுமின்றிப் போனதாலும், ஞானவொளியை எங்கும் பரவச்செய்வதற்கே முருகக்கடவுள் படைபெடுக்க லாயினுர். இக்கருத்தினுலே, அவருக்குப் பல படைவீடுகள் அமைந்தன. அவ்வீடுகளே பின்னும் ஞானமார்க்கத்திற்குச் செல்ல எண்ணுவோர் வழிபடவேண்டிய தலங்களாயும் நிற்கின்றன.

முருகக்கடவுள் சூரபன்மன்மீது படையெடுத்து வந்தது அரக்கர்களை வேரறக் களைவதற்கன்று. கூடியவரையில் அவர்களைச் சீர்திருத்தி நல்வழிக்குக் கொண்டுவருவதற்கேயாகும். அசுரர் அழியவேண்டுமென்பது அவர் திருவுள்ளமாயின், இருந்தவிடத்திலேயேயிருந்து தனது சங்கல்பத்தினுலேயாவது, வேற்படையை ஏவியாவது எண்ணியது முடித்திருக்கலாம். அவ்வாறு செய்திருப்பாராயின், பின்னைய யுகங்களில் ஒரு அரக்கனுமிரான். அதைவிட்டு அன்பே வடிவாய், அசுரர்கள்பாலும் கருணைசுரந்து அவர்களும் உய்யவேண்டுமென்கின்ற எண்ணத்தால்தான் கயிலாயத்திலிருந்து நேரில் வரலாயினுர். இதற்கு அத்தாட்சி, சூரனது இராஜதானியின் வடவெல்லைக்கு அரணுயிருந்த கிரௌஞ்சத்திற்கும், அதன் புறத்தில் உள்ள மாயாபுரிக்கும் அனுப்பிய தனது சேனுபதிகளை, அரக்கர்கள் எதிர்த்தால்மட்டும் போர்செய்யும்படி முருகக்கடவுள் கட்டளையிட் டனுப்பினுர்:—

ஏயநின் றுணைவர்க ளிலக்கத் தெண்மர்க
ளாயிர வெள்ளமா மடல்கொள் பூதர்கள்
சாய்வறு தலைவர்க டம்மொ டேகியே
நீயவன் பதியினை வளைத்தி நேரிலாய்.

தடுத்தெதிர் மலைந்திடு மவுணர் தானையைப்
படுத்தனை தாரகப் பதக னெய்துமே
லடுத்தம ரியற்றுதி யரிய தேலியா
முடித்திட வருகுது முற்போ வென்றுன்.

—கந்தபுராணம் - தாரகன் வதைப்படலம் - 9 - 10.

என்று கந்தன், வீரவாகுதேவருக்குக் கட்டளையிட்டதும், தாருகனைக் கொன்றபிறகும் வீரவாகுதேவரைச் சூரபன்மனிடம் வீரமகேந்திரபுரிக்குத் தூதராக அனுப்பியதும், அன்பின் செய்கையன்றி வேறுகுமோ? கூடுமாயின், சூரனையும் தம்பிமார் முதலானோரையும் கொல்லாமலே தேவர்களைச் சிறையினின்று நீக்கலாம் என்பதே அவர் திருவுள்ளமா யிருந்ததென்பது கந்த புராண வரலாற்றுல் விளங்கும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6ம், பத்து—4ம், தசகம்

[122-வது பக்கத் தொடர்ச்சி]

8-ம் பாசுரம்

நீணிலத்தொடுவான்வியப்ப
நிறைபெரும்போர்கள்செய்து
வாணனாயிரந்தோள் துணித்தது
முட்படமற்றும்பல
மாணியாய்நிலங்கொண்டமாயனென்
னப்பன்றன்மாயங்களே
காணுநெஞ்சுடையேனெனக்
கினியென்னகலக்கமுண்டே

குறிப்பு:—வாணுசுரன் என்பான் குமரிமுதல் ஹிமவத்கிரி உட்பட்ட எல்லா இடங்களிலுமுள்ள அழகு வாய்ந்த கன்னிகைகளையும் பெண்டீர்களையும் பலாத்காரமாய் அபகரித்துக் கொணர்ந்து அவர்களிடத்தில் இன்பம் நுகர ஹிமவத்கிரிக்கு அருகாமையில் தன் கோட்டைக்குள் சிறைப்படுத்தினுன். இவன் சிவபெருமானை உத்தேசித்துக் கடுந்தவம் இயற்றி அதன் பயனுகப்பெற்ற அப்பெருமானது அனுக்கிரகத்தால் ஒருவராலும் வெல்லத்தகாதவனுய் மதம்பிடித்து இத் தீச்செயலை செய்து உலகத்தைப் பிடித்தான். ஸ்ரீகிருஷ்ணபகவான் துஷ்டநிக்ரக சங்கல்பத்தால் இவன்மீது போர் தொடுக்கவும் இவன் தன் சேனைகளின் உதவி கொண்டு எதிர்த்தான். வெகுநேரம் போராடிய அவனது சேனைகள் அழியவே அவனுக்குதவியாய் அக்நி பகவானும் ஆறுமுகக் கடவுளும் ஸ்ரீ கிருஷ்ணபகவானை எதிர்த்தனர்கள். இவர்களுடன் கூடிக்கொண்டு மஹா கருணாநிதியான சிவபெருமானும் வாணனைக் காப்பாற்றுதலின் பொருட்டு ஸ்ரீகிருஷ்ணனை எதிர்த்துச் சண்டைசெய்தார். இவ்வண்ணம் நாலுபக்கமும் ஒவ்வொன்றாய்த்தொடர்ந்து வலியபோர்கள் பலபல ஸம்பவித்ததால் "போர்கள் செய்து" என்று பன்மையிற் பாசுரம் கூறுகிறதென்று அறியவும். கடைசியில் கருடாரூடரான ஸ்ரீ கிருஷ்ணன் எல்லாரையும் துரத்தி வாணனது ஆயிரம் கைகளையும் வெட்டி அவனை மாய்வித்தார். சிறைப்பட்ட பெண்கள் விடுதலையடைந்து அவரவர்வீடுசேர்ந்தார்கள். இப்போர்களை ஆகாயத்தில் பகவான் கருடாரூடராய் நடத்தினுராதலால் இவ்வுலகத்தாரும் வானத்திலுள்ளோரும் அவைகளைக் காண முடிந்தது.

பொழிப்புரை:—ஸ்ரீ கிருஷ்ணவதார மெடுத்து வாணுசுரனை ஜயித்த சேஷ்டிதங்களையும் ஸ்ரீ வாமநாவதாரமெடுத்து யாசகம் செய்து அதின் வியாஜத்தால் மூன்றுலோகங்களையு மளந்துகொண்ட திவ்விய சேஷ்டிதங்களையும் நினைந்துநினைந்து ரஸத்தோடும்நேசத்தோடும் அனுபவிக்கும் நெஞ்சுடைய [illegible] கலக்கமுண்டோ வென்கிறார்.

199159

விசேஷக் குறிப்பு:—"காணும் நெஞ்சுடையேன்"—நெஞ்சானது இதர இந்திரியங்களால் நுகர்ந்ததை மனனம் செய்யுமேயன்றிக் கண்களே செய்யக்கூடிய தொழிலாகிய "காண்கை" யை எப்படிச் செய்யும்? கண்கள் முதலான உறுப்புக்கள் நெஞ்சுஉள்பட ஒரு ஆத்மாவின் குணிகள் அல்லவோ? இதை நினைத்து ஒன்றின் அநுபவத்தை மற்றதற்கு உரித்தாகக் கவி ஆரோபித்து அநுபவிக்கிறாரு? அல்லது வேறு எவ்வாறாஎன்றால்? முன் சென்றுபோன "முடியானே" என்கின்ற தசகத்தில் ஆழ்வார், தம் காதுகள் பகவானது சரித்திரங்களைக் கேட்டால் மாத்திரம் போதாதென்றும், கண்கள்போல் பார்த்து அநுபவிக்கவும் வேண்டுமென்றும், இதுவேபோல் மற்றைய இந்திரியங்களும் வேறொரு இந்திரியத்தின் தன்மையைத் தான் பெற்றுப் பகவானின் குணநியங்களை அக் கருவிகளின் நுகர்ச்சியைப்போலத் தாங்களு மடையவேண்டுமென்றும் ஆசைப்பட்டதாக முறையிட்டார். "வைவே முலகிலும்" "மின்னிடை மடவாரிலும்" ஆழ்வாரை இழந்தால் என்செய்வதென் றுற்றுப் மேல்விழுந்து வந்து அவரைத் தேற்றுவித்துத் தன் பக்கலிலாக்கிக்கொண்ட மஹாநுபாவன், ஆழ்வாரின் ஒவ்வொரு இந்திரியமும் தன் சொந்த சாதாரணமான அநுபவத்தோடுங்கூட மற்றைய இந்திரிய நுகர்ச்சியையும் அடைய ஆழ்வாரின் வேண்டுகோளுக்குஇரங்கி வரங்கொடுத்திருக்கலாம். இவ்வண்ணமாயின் நெஞ்சானது "கண்களாகிய இந்திரியத்தின் காரியமாகிய "பார்வையை"ச் செய்ய ஏன் வரம்பெற்றிருக்கக்கூடாது? ஆழ்வாருக்கு வாய்த்த வரப்பிரஸாதத்தால் அவருடைய நெஞ்சு "நினைக்கவும்" வல்லதாயிருக்கும் "காணவும்" வல்லதாயிருக்கு மென்று திருக்குருகைபிரான் பிள்ளான் என்ற ஆசான் பணிக்குமென்று பூர்வர்கள் அருளிச் செய்வார்கள்.

காதால் கேட்பதை நெஞ்சு சிந்தித்து அநுபவிப்பதைக்காட்டிலும் நெஞ்சுக்கே கண்களாகிய இந்திரியங்களைப்போலக் காணக்கூடிய சக்தி யிருந்ததானல் மேற்படி அநுபவம் எவ்வளவு இன்பமாயும் உறுதியாயும் விசதமாயும் இருக்குமென்பதை ஊகிப்பதற்கு அடுத்த பாசுரமே நமக்குக் கற்பிப்பதை இங்கு உணர்த்திவைக்கின்றோம். அது ஏனென்னில், விளக்கிக்கூறுவோம். வைகுண்ட வாசியான ஸர்வ வல்லமையுள்ள பரவாஸுதேவக் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணனுய்த் தேவர் வேண்டுகோளுக் கிணங்க அவதரித்ததைக் கீழ்ச் சென்ற 5-ம் பாசுரத்தில் கண்டோம். இப் பரம்பொருளுக்கு அமையாத சக்தி உண்டோ? எல்லா உலகங்களிலும் நடக்கும் எல்லா ஸம்பவங்களும் அவனுக்குத் தெரியாமல்இருக்க இடமுண்டோ? இப்படியிருக்க இப் பரம்பொருளுக்கு, தாமே கிருஷ்ணனாக அவதரித்து நடத்தும் காரியங்களும் அவனது திவ்விய சௌந்தரியமும் மிக்க ஆச்சரியமான லீலைகளும மறைவாகுமோ? வேதாந்திகள் "தர்மபூதஞானம்" என்கிற —அதாவது வஸ்து தத்துவத்துக்கே ஸகஜமாயுள்ள—ஞானத்தாலே வைகுண்டத்தி லிருந்தபடிக்கே தானிட்ட வழக்கான தன் தேஹஸௌந்தரியமும் அங்க வடிவழகும் அறியாமலிருக்க என்ன பிரஸக்தி உண்டு? இது இப்படி இருக்க "தர்மபூத ஞானம்" எல்லா ஞான அறிவுக்கும் சீரியதாயினும் பிரத்தியக்ஷ கண்களால் காணுவது இதிலும் விசேஷமென்று பக்தர்கள் கண்டறிந்து தீவிர பக்திசெய்து வைகுண்டத்திற்கு ஏகி அங்குக் கண்கள் ஆரத் தன்னைப் பிரத்தியக்ஷித்து ஆநந்தமடைவதுவே சீரியதென்பதைக் கற்பிக்கவோ, "பிரியோஹிமே" நீ எனக்கு வெகுப் பிரியன் என்று சொல்லத்தக்க அர்ச்சுனன் இரண்டு கைகளாலும் பாணங்களெய்ய ஆற்றலுடையவனென்று இறுமாப்புக் கொண்டு தன்னை ஆண்மையிலும் வீரத்தனத்திலும் விஞ்சினவரில்லை என்று கருதியிருந்த கர்வத்தை அடக்கவோ அல்லது வேறு எந்நிமித்தங்கொண்டோ கண்ணபகவான் இவ்வுலகத்தினின்றும் பரமபதத்துக்கு ஏரும்படி பாவாஸுதேவன் சங்கல்பித்தான். ஸ்ரீகிருஷ்ணபகவான், அதி ஆவசியமான கட்டளை ஒன்று இருந்தாலன்றி அங்ஙனம் பரமபதத்திற்குச் செல்ல வாய்க்குமோ? இதுபற்றி ஒரு சூழ்ச்சி நேர்ந்தது. ஒரு வைதிகப் பிராமணனது மனைவி பிரஸவவேதனைபட்டு ஓர் மகனை ஈன்றதாக ஒருநாள் வதந்தி ஏற்பட்டது. மகவு தோன்றினதைப் பிரஸவ அறையுள் உற்றார் எல்லாரும் கண்ணால் கண்டார்கள். வெளியிலுள்ளாருக்கும் அழுகைக் குரல் கேட்டது. பிறகு, மகனையோ காணவில்லை. யாரோ கந்தருவன் ஆகாய மார்க்கமாய்த் தூக்கிச்சென்றான் என்றார்பலரும். இதுபோலவே அடுத்தஆண்டிலும் இப்பார்ப்பினிக்கு மற்றொரு மகவுபிறந்தது. முன்போலவே அதுவும் மறைந்தது இவ்வண்ணம் ஐந்து முறை நேர்ந்துவிட்டதின்மேல் பிராமணனை ஊராரெல்லாரும் தூண்டி ஆறுவதுபிரசவத்துக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய உதவியை அபேக்ஷிக்கச்செய்தார்கள். பிராமணனு மவ்வண்ணமே ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாளிகைக்கு அருகாமையில் ஓர் விடுதி ஏற்படுத்திக்கொண்டு பிரஸவ வேதனை தடங்கியவுடன் பகவானின் உதவியை எதிர்பார்த்திருந்தான். இதுஇப்படி நிற்க. இதே ஸமயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் கடுந்தபசு இயற்ற நிச்சயஞ் செய்திருப்பதாகவும் அதின் மத்தியில் யாரும் தன்னிடம் சென்று அத்தவத்தைக் கலைக்கவொண்ணாதென்றும் திட்டப்படுத்திக் கொண்டு யார்வந்தாலும் மாளிகைக்குள் சென்றணுகக்கூடாதபடி தன் அன்பனான அர்ச்சுனவீரனை வில்லோடும் பாணங்களோடும் காவல்அமர்த்தினன். மேற்படி தபோயாகத்தில் காலை ஸவனம் நடந்துகொண்டிருக்கையில் மேல்குறித்த பிராமணன் தன்மனைவி நோவுபடுவதாகவும் ஆறுவது பிரஸவத்துக்கு வேளைவந்துவிட்டதாகவும் கூறிக் கிருஷ்ணர் உதவியைக் கோரினவனாய் மாளிகையகத்துச் செல்லப் பலாத்காரஞ் செய்தான். அர்ச்சுனன் "நான் காவல் நிற்கிறேன், உன்னை உள்ளே விடமுடியாது. ஆனாலும் நீ பிராமணனுதல் பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனை அடுத்திருப்பதைப்பற்றியும் அவருக்குப்பிரதிநிதியாக அவர் ஏற்றகாரியத்தை நானே உனக்கு நிர்வகித்துக் கொடுப்பேன்" என்றான். "உன்னால்வல்லகாரியமல்ல" வென்றுபார்ப்பான் தர்க்கித்தான். ஆயினும், "உலகத்தில்என்னைப்போல் சிறந்த வில்லாளிகள்வேறொருவரில்லையென்று எனக்கு ஸவ்வியாசி என இடது கையாலும் பாணங்களை இலக்கு வைத்து அநுஸந்தானம் செய்பவன் என்று உலகத்தார் பேரிட்டிருப்பது கேட்டிலேயோ; வா உன் பிள்ளையைக் காப்பாற்றித்தருகிறேன். நான் க்ஷத்திரியன், வாக்குத் தப்பாதவன், ஆண்மையுள்ளவன். காரியம் தப்பாது, வா" வென்று அர்ச்சுனன்பார்ப்பானுடன் அவன் இல்லம் சென்றான். சென்றதும் சிசு ஜநித்த ஆரவாரம் பார்ப்பனனது மனையில் கேட்டது. அகத்துள்ள பெண்டுகளும் மகவைக் கண்ணால் கண்டார்கள். அழு

கைக்குரல் அரச்சுனனும்கேட்டான். மகவோ மறைந்தது. பாணங்களைச் சரமாரியாய்ப் பொழிந்தும் எடுத்துப் போனவனுக்குத் தீங்கில்லை. ஆகவே மகவிழந்த அந்தப்பார்ப்பான் அர்ச்சுனனைப் பிடித்து வலித்துக் கண்ணபிரானது திருமாளிகைக்குக் கொண்டுவந்து "உன்னை விடேன், கண்ணனை யழைத்துப் போயிருந்தால் எனது மகனை யொருவரும் தூக்கிப்போகாமல் அவர் ரக்ஷித்திருப்பார். நீ அது செயதாயில்லை. உன்னை நான் விடமாட்டேன்" என்று சச்சரவு செய்யவே இந்த அரவம் கண்ணபிரான் காதில் கேட்டது. உடனே ஸாயம் ஸவனத்தை நிறுத்தி வெளியில் வந்து கண்ணன்வினவ உள்ளபடி நடந்ததெல்லாம் அங்கு இருந்தவர்கள் உரைத்தார்கள். உடனே தானே கண்ணபிரான் தன் இரதத்தில் நான்கு குதிரைகள் பூட்டி அர்ச்சுனனையும், வேட்டைநாய்போல் அவ் வர்ச்சுனனைப் பிடித்தபிடி விடாத பார்ப்பானையும் தேரிலேற்றிக் கொண்டு ஒரு நொடியில் ஆகாயமார்க்கமாய்ச் சென்று வைகுண்டத்துக் கேகினர். முதலி லிருட்டாலும் பிறகு தேஜோமண்டலங்களின் காந்தியாலும் கண்ணுக்கு ஒன்றும் புலப்படாத இடத்தில் அர்ச்சுனனையும் பார்ப்பானையும் தேரில் விட்டுவிட்டுப் பரவாஸுதேவனிடம் சென்று உபய வீபூதி நாதன்மார்களான கண்ணபிரானும் வைகுண்டவாசியும் ஐக்கியமடைந்தார்கள். பரவாஸுதேவன் கண்ணபிரானைக் கண்ணுற்றதும் திருப்தனுகி அவருக்கு விடையளிக்கவே பிராமணனையும் அவனுடைய ஆறு மக்களையும் அர்ச்சுனனையும் இந்தலோகத்தில் கண்ணபிரான்கொண்டுவந்து சேர்த்தார். இம்முறை ஸம்பவங்கள் நிகழ ஆறேழு மனுஷ வருஷங்களானாலும் வைகுண்டத்தாருக்கு அந்தத் தேசமான க்ஷணத்திற்குக் கோடியின் ஒரு அம்சமே ஆயிற்று. கண்களின் பார்வையில்லாமல் நேரிடும் மனக்காட்சி மேற்படி இந்திரியத்தின் உதவியால் தோன்றும் காட்சியைவிட மிகச் சீரியது என்றே இவ்விதிகாஸம் கற்பிப்பது அறியத்தக்கது. இவ்விதிஹாஸக் கதையே அடுத்த பாசுரத்திற்குச் சந்தர்ப்பமும் ஸங்கதியும் ஆம்.

ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித் திரட்டு

[120-வது பக்கத் தொடர்ச்சி]

ஹூப.—இதோ இரும்பைக் கொடுங்கள். அவனை இங்கே கட்டுங்கள்.

ஆர்.—ஐயோ! எதற்காக நீ இவ்வளவு முரட்டுக் கொந்தளிப்புக் கொள்ளவேண்டும், நான் திமிறமாட்டேன். கல்லைப்போல் அமைதியாய் அசைவற்றுநிற்பேன். கடவுளின்பொருட்டு என்னைக் கட்டாதீர். நான் சொல்வதைக் கேள், ஹூபர்ட்! இம்மனிதர்களைத் துரத்திவிடு; நான் ஓர் ஆட்டுக்குட்டியேபோல் அமைதியா யடங்கியிருப்பேன். நான் அசையேன்; கண்ணிமையேன்; ஒரு வார்த்தை பேசேன்; உன்னைச் சினந்து நோக்கவும் நோக்கேன். இம்மனிதர்களை வெளியில்மட்டுந் தள்ளு; நீ எனக்கு எவ்வளவு சித்திரவதை செய்தபோதிலும் உன்னை மன்னித்துவிடுவேன்.

ஹூப.—போங்கள். உள்ளே இருங்கள்; இவனை என்னோடு தனியே விடுங்கள்.

முதற்கொலை.—இச் செய்கையைவிட்டு விலகி நிற்கும் பேறு பெற்றேன். (கொலைஞர் போதல்.)

ஆர்.—அடடா! எனது நண்பனொருவனைத் துரத்திவிட்டேன். கொடிய பார்வையனாயினும் அவன் கனிந்த இதயம் உடையவன். அவன் மீண்டும் வரட்டும்; அவனது கருணை உன் இரக்கத்திற்கோர் உயிர் கொடுக்கலாம்.

ஹூப.—வா! பிள்ளாய். ஆயத்தமாவாய்.

ஆர்.—வேறு வழியில்லையோ?

ஹூப:—இல்லை. கண்ணை யிழப்பதைத் தவிர வேறு இல்லை.

ஆர்:—ஓ தெய்வமே! உன் கண்களில் ஏதாவதோர் சிறு துரும்பு, ஒரு பருக்கை, மிகச் சிறு தூசு, ஒரு கொதுகு, அல்லது தவறிச் சிக்கிய மயிர்,—நுண்ணிய உணர்ச்சி உடைய அவ்விந்திரியத்தில் ஏதேனும் ஒரு சிக்கல்-இருக்கலாகாதா? அப்பொழுது, நொய்தின்நொய்ய பொருளும் அங்குப்புகுமாயின் புரியும் ஆரவாரத்தை அறிந்து, உனது புல்லிய எண்ணம் எத்துணைக் கொடியதென்று உனக்கே தோன்றக்கூடும்.

ஹூப:—இதுவோ உன் வாக்குறுதி? போ! போ! உன் நாவை அடக்கு.

ஆர்:—ஹூபர்ட்! கண்ணிரண்டைக் காக்க நாவிரண்டிருப்பினும் அவை அவ் விழிகளுக்காகப் பரிந்து பேசுதல்அமையும். நான் என் நாவை அடைக்காதிருப்பேனுக; அடக்காதிருப்பேனுக ஹூபர்ட்! அல்லது, ஹூபர்ட்! உனக்கு மனதுண்டேல் என் நாவை அறு; என் கண்களைமாத்திரம் விட்டுவிடு. ஓ! என் கண்களைக் காவாய். வேறெக்காரியத்திற்குமில்லாவிடினும், உன்னைப் பார்ப்பதற்காக வேனும் எனக்குக் கண்களைக் கொடு. இதோ பார்! உண்மையிலே இவ்விரும்பு ஈரமுற்று [1] எனக் கிடுக்கண் செய்ய மனமில்லா மலிருக்கிறது.

ஹூப:—நான் அதைக் காயவைக்கக்கூடும்.

ஆர்:—இல்லை. உண்மையில் இயலாது; ஏனெனில் நெருப்பானது மனிதருக்கு நன்மையைச்செய்யப் படைக்கப்பட்டிருக்க, தகாதசெய்கைகளில்அதனை உபயோகிக்க முயல்வதால் அது வருத்தமுற்று இறந்துபட்டது. நீயே பார். சுடுகின்ற இந்தக் கரியில் யாதொரு பகையுமில்லை. இறைவனது காற்று அதனது குணத்தை மாற்றி அதன் தலையில் நீறு பூசியுள்ளது. [2]

ஹூப:—ஆயினும், பிள்ளாய், எனது மூச்சின் காற்றினல் அதனை உயிர்ப்பிப்பேன்.

ஆர்:—அங்ஙனம் செய்வாயானல் நீ அதனை முகஞ் சிவக்கச் செய்து, உன் செய்கைகளைக் கண்டு நாணிக் கொதிக்கச் செய்வாய் ஹூபர்ட். [3] ஒரு சமயம் அது உன் கண்களிற் பொடித்துத் தெறிக்கினும் தெறிக்கும்; வலிந்து சண்டையிடத் தூண்

(1) குளிர்ந்து, இரக்கமுற்று.

(2) நீறு பூசுதல்-ஆங்கிலத்தில், குற்றத்தை யுணர்ந்து வருந்தி மனந் திரும்பிக் காஷாயம் உடுத்துச் சந்நியாசங் கொள்வதற்கு நேர்.

(3) ஆங்கிலேயர்களுள் முகஞ் சிவத்தல் வெட்கத்திற்கு அறிகுறியாம். காயவைத்துச் சிவப்பு நிறமடையச் செய்வாயானல், இரும்பு உன் செயலைக்கண்டு நாணினதாகும்.

டப்படும் நாய்போல், தன்னைத் தூண்டுகின்றவுடையவன்மீதே திரும்பிக் கடிக்கவுங்கூடும். நீ என்னைத் துன்பப்படுத்தும்பொருட்டு உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளுந் தன்தன் தொழிலைச் செய்ய மறுக்கின்றது. கருணை இல்லா வேலைகளில் கையாளப் படுவனவெனக் கீர்த்திவாய்ந்த பொருள்களாகிய நெருப்பும் இரும்பும் காட்டுகின்றகருணையுங்கூட, உன்னிடத்தில்தான் இல்லாமற் போயது.

ஹூ:—நன்று! பார்க்கப் பிழைத்திரு. [1] உனது சிற்றப்பன்தான் கொண்டுள்ள அத்துணைப் பொருளையும் எனக்குக்கொடுப்பதாயினும் உனது கண்களைத் தொடேன். எனினும், சிறுவ! நான் இதே இரும்பைக்கொண்டு உன் கண்களைச் சுடுவதாய் ஆணையிட்டுள்ளேன், அப்படிச் செய்யவும் எண்ணியிருந்தேன்.

ஆர்தர்:—ஓ! இப்பொழுதே நீ ஹூபர்ட்டைப்போல் தோன்றுகிறாய். இதுவரை மாறுவேடம் பூண்டிருந்தாய்.

ஹூ:—வாளாவிரு, போதும். நாம் போவோம். உனது சிறியதந்தை நீ இறந்தாய் என்பதைத் தவிர வேறெதையும் அறியக்கூடாது. இந்த வன்னெஞ்சுடைய ஒற்றருக்குப் பொய்க்கூற்றுகளைச்சொல்லி அவர் மனத்தை நிரப்புவேன். அழகுள்ள குழந்தாய்! உலகிலுள்ள செல்வமனைத்தையும் ஒருங்கே தரினும் ஹூபர்ட் உன்னைத் தீண்டான் என்னும் உறுதியோடு ஐயமும் அச்சமுமற்று உறங்குவாய்.

ஆர்:—ஓ கடவுளே! ஹூபர்ட்! உனக்கு வந்தனமளிக்கின்றேன்.

ஹூ:—அரவஞ் செய்யாதே: என்னுடன் மறைந்துவா: உனக்காக நான் பெரும் அபாயத்திற் குள்ளாகிறேன். (இருவரும் போதல்.)

முன்னை அநுமன்சீதையைக்கண்டு கணையாழியைத்தந்தநாள்,வீயுமுயிர் மீளப்பெற்றசீதை அடங்கா மகிழ்ச்சி கொண்டு "ஊழியோர் பகலாயேதும் யாண்டெலா முலகமேழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி" என்று அநுமனை வாழ்த்தினாள். அவ்வாசியையே கொண்டுள்ளது இக்காட்சியும். ஊழிதிரியினும் திரியாப் புகழ்படைத்தவிக் காட்சியைப்பற்றிக் கட்டுரை வரையவேண்டா. ஹூபர்ட் ஆர்தரின் கண்களை அவிக்கப் புகுந்த செய்கையில் நமக்கொருபுறம் அச்சம் பிறக்க அவ்வச்சம் நாம் இளைய ஆர்தர்மேல் கொண்டுள்ள இரக்கத்தால் மேன்மேல் வளர்ந்து நம்மனதை வருத்துகிறது. ஷேக்ஸ்பியருக்குமுன் இருந்த நாடகக் கதையொன்றில் கொலைஞர் ஹூபர்ட்டுடன் வந்து ஆர்தரைக் கட்டி நின்றதாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஷேக்ஸ்பியர் செய்த மாறுபாடுகளை நோக்குங்கள்! ஆர்தர் மிகவும் இரந்துமன்றாடுகின்றபோது, ஹூபர்ட்டினுடைய நெஞ்சம் இளகுகின்றதென்னக் காணப்படும் அமயத்தே கொலைஞர் வருகின்றனர். அதனால், தப்பிப்பிழைப்பானிளைஞனென நினைக்கும் நம் மனம் கொலைஞர் வருகையால் ஹூபர்ட்டின் நெஞ்சம் மீண்டும் இறுகுமோவெனத் துணுக்கமடைகின்றது. "நீ செய்ய வேண்டுமோ? செய்வாயோ?" என்று அவன் கேட்குமிடத்தில் புகட்டப்பட்டிருக்கும் இரக்கத்தையும், 'உனக்கிதைச்செய்ய மனந்துணிந்ததோ" என்று அச்சிறுவனைக்கழுவிடத்துத்தோன்றும் இரக்கத்தையும் நாம் தாங்குவது அரிது. இத்துணையும் நம்மை அவலப்படுத்திப் பின் அவனைக் கண்ணிழக்காமற் செய்தமை நமக்கும் சந்தியாயுள்ளது.

ஹூபர்ட்டின் மனநிலையைக் காட்டும்விதமும் வியக்கத் தக்கதே. ஆர்தரைக் கொலைசெய்வதாய் அரசனுக்குக் வாக்களித்துவிட்டு, அவ்வாறே செய்யப்புகுங்கால், இச்சிறுவன் அவனிடம் காட்டும் அன்பும், "உன் பிள்ளையாயிருந்தால் நீ என்னிடம் அன்பு கொள்வாய்" என்று தன் சிற்றப்பனுடன் இவனை ஒப்பிட்டுக்காட்டுகின்றதன்மையும், "இரவெல்லாம் உனக்குநான் பணிவிடை செய்வேன்" என்றிளைஞன் காட்டும் வாஞ்சையும் ஹூபர்ட்டின் மனத்தைக் கலக்கி விடுகின்றன. எவ்வாறு தப்புவதென அறியாமையால் விரைவிற் காரியத்தை முடிக்க எண்ணுகிறான். அச்சூழ்ச்சியும் பயன்படாமற் போய்விடுகிறது. இக்காட்சி முழுவதும் சான்றோர் கவியாகையால் ஆழ்ந்த பொருள் பொதிந்துள்ளதைக் காண மகிழ்ச்சி பெருகும். கண்ணிழக்குஞ் சமயத்திலொருவன் கவிக்குரிய அணிகளுடன் பேசுவானோ என்கின்ற ஐயம் ஒதுவார் மனத்தில் எழலாம். ஆயினும் ஆர்தரது பேச்சுக்களனைத்தும் அவனது மழலையோடுறழ்ந்திருப்பதால் அதன் அசம்பாவிதம் நமக்குத் தோன்றவில்லை. இது ஷேக்ஸ்பியரின் கைவன்மையிலொன்று. உண்மை ஆர்தர் இறக்குங் காலத்தில் பதினைமூண்டுடையவனாயிருந்தான். ஷேக்ஸ்பியர் அவனைச் சிறுமையனாக்கிப் பேயுமிரங்கும் பேச்சுக்களைப் புகல வைக்கிறார்.

இதுவரை இந்நாடகத்தில் உள்ள அழகிய பாகங்களை எடுத்துக் காட்டினோம். வரையாது விடப்பட்டவை பால்கன்பிரிட்ஜ் என்பவனது தேசாபிமானம் தோன்றுமிடங்களே. அவை இந்நாடக முழுவதும் பரவியுள்ளன வாதலாலும், ஆங்கிலேயருக்கேயன்றிப் பிறருக் கவை உவப்பை யூட்டாவாதலாலும் அவைகளை எடுத்து இங்குக் காட்டாமல் விடுகின்றோம்.

(1) பிழைத்துப் பார்த்திரு; பிழைத்துப் பார்வையோடிரு.

ஜான் அரசன் முற்றிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலகீஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவைரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
நஞ்சன்கூடு பல்பொடி
கோரோஜனை மாத்திரை
ஜவரேக்
எல்லவித ஜ்வரங்களுக்கும்
காஸ்ட்ராலகஸ்
ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

II. திருப்பதி ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

[124-வது பக்கத் தொடர்ச்சி]

2. இராகம்—மத்யமாவதி.] [தாளம்—ஆதி.

பல்லவி

வேங்கடேஶ நினு ஸேவிம்பனு பதி - வேல கன்னுலு காவலெநய்ய..............(வேங்)

அநுபல்லவி

பங்கஜாக்ஷ பரிபாலித முனிஜன - பாவுகமகு திவ்யரூபமுனு கொந்த..............(வேங்)

சரணம்

1. எக்குவ நீவநி திக்குல பொகடக - நக்கரகொநி மதி ஸொக்கி கநுகொந
நிக்கமு நீவே க்ரக்குந ப்ரோவ த - ளுக்கநி மெரயுசுந்நாவு சக்கதனமு கல.......(வேங்)

2. ஏ நோமுபலமோ நீ நாமாம்ருத - பானமனு ஸோபாநமு தோரகெனு
ஸ்ரீநாயக பரமாநந்த நீஸரி - காநமு ஸோபாய மாநாங்க்ருலுகல..................(வேங்)

3. யோகி ஹ்ருதய நீவே கதியநு ஜன - பாகதேய வரபோகி ஶயன
பாகவதப்ரிய த்யாகராஜநுத - நாகா சலமுபை பாதுக நெலகொன்ன.............(வேங்)

பொருள்.

வேங்கடேஶ - ஸ்ரீநிவாஸப்பெருமானே, நினு ஸேவிம்பனு - உன்னைத் தரிசிப்பதற்கு, பதிவேல கந்நுலு காவலெனு அய்ய - பதினாயிரங் கண்கள் வேண்டுமையா.

பங்கஜாக்ஷ - தாமரைக் கண்ணனே! பரிபாலித முனிஜன - முனிவர்களைக் காப்பாற்றுபவனே; பாவுக மகு திவ்ய ரூபமுனு கொந்த - மங்களகரமான சிறந்த ரூபத்தோடு கூடிய (வேங்கடேச அய்ய - ஸ்ரீநிவாஸப் பெருமானே ....வேண்டுமையா)

நீவு எக்குவஅநி - நீயே (தேவதைகளிற்) சிறந்தவனென்று, திக்குலு பொகடக - எண்டிசையிலு முள்ளவர்கள் புகழ, அக்கர கொநி - ஆர்வ முண்டாகி, மதி ஸொக்கி - அகங் கரைந்து, கநுகொந-தரிசிக்க, நிக்கமு - வாஸ்தவமாக, நீவே - நீயே, க்ரக்குந ப்ரோவ- சீக்கிரமாகக் காப்பதற்காக, தளுக்கனி மெரயுசுந்நாவு - சிறப்புடன் விளங்குகிறாய். சக்கதனமுகல - சௌந்தரியம் பொருந்திய (வேங்கடேச......அய்ய - ஸ்ரீநிவாஸப் பெருமானே...... வேண்டுமையா.)

ஸ்ரீநாயகா - திருமகள் கொழுநனே, நீ நாமாம்ருதபானமு - உனது நாமசங்கீர்த்தனமாகிய அமிர்தபானம், அநு - என்கிற, ஸோபானமு - படிக்கட்டானது, தொரகெநு- கிடைத்தது; (அது), ஏநோமு பலமோ - நான் செய்த எந்தப் பூஜையின் பலனோ? பரமாநந்த - பரமாநந்த ரூபியே, நீஸரி காநமு - உனக்கு நிகரானவனைக்காணமுடியவில்லை; சோபாயமான அங்க்ருலுகல - பிரகாசிக்கின்ற சரணகமலங்களையுடைய, (வேங்கடேசா......அய்ய - ஸ்ரீநிவாஸப் பெருமானே......வேண்டுமையா.)

யோகிஹ்ருதய - யோகிகளின் உள்ளத்தில் உறைபவனே, நீவே கதியநு ஜன - நீயே கதியென்று நம்பியிருக்கும் பக்த ஜனங்களின், பாகதேய - பாக்கியமானவனே, வரபோகி சயன-சிறந்த ஆதிசேஷன்மேல் துயில்பவனே, பாகவதப்ரிய - அடியார்களுக்குப் பிரியமானவனே, த்யாகராஜநுத - தியாகராஜனால் தோத்திரஞ் செய்யப்பட்டவனே, நாகாசலமுபை பாதுக நெலகொன்ன - சேஷாசலத்தின் மீது (அதாவது திருப்பதி மலையின்மீது) சிறப்பாக வீற்றிருக்கும், (வேங்கடேச........வேண்டும்.)

குறிப்பு:—இந்தக் கீர்த்தனம் காலஞ்சென்ற ஸ்ரீமான் K. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காரியற்றிய "ஸ்ரீத்யாகராஜ ஹ்ருதயம்" என்ற நூலில் சிறிது பாட பேதப்பட்டு இருக்கின்றது. அன்றியும் வர்ண மெட்டானது முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது. ஆனால் இதன் சம்பிரதாய பாடமே கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இதை எனக்குப் போதித்தவர், பிரபல வித்வான் காஞ்சீபுரம் ஸ்ரீமான் கா. சுப்பிரமணியப் பிள்ளை (நாயனாப் பிள்ளை) யவர்களின் பிரதம சீடராயிருந்து காலஞ்சென்றவரும், எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் முதன் முதலாக அனுபவ ஸங்கீதாம்ருதத்தை யூட்டியவருமான ஸ்ரீமான் வில்லியம்பாக்கம் நரசிம்மாசாரியராவர். எனக்குச் சாஸ்திர விஷயமாக மிகவும் நுண்ணிய விஷயங்களைக் கற்பித்த ஸ்ரீமான் K. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களே தமக்குக் கிடைத்த பாடாந்தரத்தைப் பற்றிச் சந்தேகங் கொண்டிருந்தாரென்பதை இங்குக் குறிப்பிடவிரும்புகிறேன்.

மத்யமாவதி ராக லக்ஷணம்.

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறையின்படி 22வது மேளகர்த்தாவான கரஹரப்ரியையில் ஜன்யம். சிலர் இதை 20-வது கர்த்தா ராகமான நடபைரவியில் ஜன்யமென்றும் கூறுகின்றனர். இந்த ராகத்தை வேங்கடமகி "மத்யமாதி" என வழங்குகின்றார். இது சுத்தக் கர்நாடக ராகம். ஔடவ ஔடவம். காந்தார தைவதங்கள் வர்ஜ்யம். சதுச்ருதி ரிஷப, சுத்த மத்யம கைசிகீ நிஷாதங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். இதற்குக் கிரகஸ்வரம் மத்யமமென்பதும் இது சாயங்கால வேளையிற் பாடத் தகுந்ததென்றும் வேங்கடமகியின் அபிப்பிராயம். ஆனால் இந்த ராகம் மத்தியான வேளையிற் பாடப்படவேண்டுமென்பதே பொதுவான அபிப்பிராயமாகக் காணப்படுகின்றது. எனினும் இன்னின்ன ராகங்களே இன்னின்ன வேளைகளிற் பாடப்படவேண்டும் என்று பூர்விகர்கள் ஒரு நியமத்தை யனுசரித்து வந்தார்களாதலால், ஸங்கீதக்கச்சேரிகள் முதலிய ஸமயங்களில் காலநியமம்மீறிப் பலவித ராகங்களையும் பாடவேண்டி வந்தபோது, முடிவில் தோஷ பரிகாரார்த்தமாக இந்த ராகத்தைப் பாடும் சம்பிரதாயத்தை யனுஷ்டித்து வந்தனர். வேங்கடமகியும் இக்காரணத்தைக் கொண்டே இதை "ஸர்வராகோயம்," என்று கூறி யிருக்கிறார். இதனால் இந்த ராகம் காலநியமமில்லாமலெப்போதும் பாடத்தக்கதென்று நாம் கொள்ளவேண்டி யிருக்கிறது. இதைச் சிலர் பாஷாங்க ராகம் என்று கூறுகின்றனராயினும் அதற்குத் தக்க காரணம் காணப்படவில்லை. "ஸங்கீத தர்ப்பணம்" என்ற பூர்வகிரந்தத்தில் இந்த இராகத்திற்குக் கூறப்பட்டுள்ள லக்ஷணம் தற்கால அனுஷ்டானத்திற்கு எவ்விதத்திலும் முரண்பட்டதா யிருக்கின்றது.

ஆரோஹணம்:—ஸரிமபநிஸ.
அவரோஹணம்:—ஸ்நிபமரிஸ.

ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸஞ்ஜையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனத்தை மிகவும் சவுக்கமாகப் பாட வேண்டும்.]

பல்லவி

; ; * ஸ்ா ; ஸ்ா; - ஸ்ா நீ பா ; - பா ; ; - பா நீ ; | ஸ்ா ; நிஸ்ாநி - பா ; மா ; | மா; ரீ ; - ரீ மா பா நீ ||
; ; * வேங் ; க ; - டே . . ; - சா ; ; - நி நு ; | ஸே ; . . . - விம்; . ; | ப ; நு ; - ஸ்ரீ . . . ||

ஸ்ாரீ * ஸ்ா ; ஸ்ா; - ஸ்நிஸ்நிபா; - பமமா ; - பா நீ ; | ஸ்ா ; நிஸ்ாநி - பா ; மா ; | மா; ரீ ;-ரிமபா-மபநிஸ் ||
. . * வேங் ; க ; - டே . . . ; - சா . . ; - நி நு ; | ஸே ; . . . - விம்; . ; | ப ; நு ;-ஸ்ரீ . . . . . . ||

ரீ ரீ * ஸ்ா ; ஸ்ா; - ஸ்நிஸ்நிபா ; - பமமா ;-பா நீ ; | ஸ்ரிம்ரிஸ்ா-ஸ்நிஸ்நிபா-பாமா | மா;ரீ ;-ரிமபா-மபநிஸ் ||
. . * வேங் ; க ; - டே . . . . ; - சா . . ;-நி நு ; | ஸே . . . -விம் . . . - . . | ப ;நு ;-ஸ்ரீ . . - . . . . ||

ரீ ரீ * ஸ்ா ; ஸ்ா; - ஸ்நிஸ்நிபா; - பமமா ; - பா நீ ; | ஸ்ரிம்ரிஸ்ா - ஸ்நிஸ்நிபா-பாமா | மா;ரீ ;- ரீமாரீஸ்ா ||
. . * வேங் ; க ; - டே . . . . ; - சா . . ; - நி நு ; | ஸே . . . - விம் . . . . - . . | ப ;நு ;- ப . தி . ||

ஸா ; * ஸநிஸரி - பாமாரீ ;-ஸாரீஸரிமா -ரீமா- ரிமபா | ரி மபநி பா, ம - ரீ ; ரீ ; | பாமாரீஸா-ரீமா பாநீ ||
. ; * வே . . . - ல . . ;-க . -நு . . -லு . - . . . . | கா . . . . , . - வ ; லெ ; | நை . . . -ய . . , ||

ஸ்ாரீ *
. . * (வேங்கடேச)

அநுபல்லவி

; ; ; * ஸ்ா ஸ்ா ; ரீ ; ரி ; ரீ ; - ஸ்ாரிம் - ரீ ஸ்ா | நீஸ்ா - நிஸ்ரீ -ஸ்ரிம்-ஸ்ரீஸ் | ஸ்நிரிஸ்-ஸ்நிபா-நீ;ஸ்ாநீ ||
; ; ; * பங் க ; ஜா ; . ; க்ஷ ; - ப . . - ரி . | பா . - . . . . -லி . . -த . . | மு . . . -ணி . . -ஜ;ந . ||

ஸ்ா; ; * ஸ்நிஸ்ா; - நிஸ்ரிஸ்ரீ; ரீ; - ஸ்ாரிம்-ஸ்ரீஸ் | நீஸ்ா-நிஸ்ரீ-ஸ்ாரிம்-ஸ்ரீஸ் | ஸ்நிரிஸ் - ஸ்நிபா - நீ; ஸ்ாநீ ||
. ; ; * பங் . க; - ஜா . . . . ;க்ஷ; - ப . . -ரி . . | பா . - . . . -லி . . -த . . | மு . . . - ணி . . - ஜ; ந . ||

ஸ்ா ; ; * ஸ்நிஸ்ா;-நிஸ்ரிஸ் -ரீ; ரீ;-ஸ்ாரிம் -ஸ்ரீஸ்; | நிஸ்ரிஸ்-ஸ்ரிம்ரி-ரிம்ப்ம்-ம்ரிரிஸ் | ஸநிரிஸ் - ஸ்நிபா-நீ;ஸ்ா; ||
; ; * பங் . க;-ஜா . . . - . ;க்ஷ;-ப . . . -ரி . . ; | பா. . . - . . . . . -லி. . . -த . . . | மு . . . - ணி . . - ஜ;ந . ||

நீஸ்ா-நீஸ்ரிஸ்-ரி; ஸ்ா;நீ;பா;-நீ, பா-ஸ்ா;நி | ஸாரிஸ்-நீஸ்நி-பா;மா ; ; | ரீ; ரிமபா- மபநீ-பநிஸ்ா ||
பா. - . . . . . -வு; க; ம; கு; -தி, . -வ்ய, . | ரூ . . - . . . -ப; . ; ; | மு;நு . . -கோ. . -ந . . ||

நிஸ்ரீ *
. . . * (வேங்கடேச)

சரணம்

; ; ; * ரீ;மாபா; -நீ;ஸ்ா;-ஸ்நிபமரீ; | ; ; ; -ரீ;மாபா; | பாநீபநிஸ்ா-ஸ்நிபமரீ; ||
; ; ; * எக்;குவ; -நீ; . ;-வ . ; . நி; | ; ; ; -எக்;குவ; | நீ . . . , -வ . . .நி; ||

; ; ; * ரீ;மாபா; -பாநீ-பநிஸ்ா-ஸ்ாநீஸ்ா; | ; ; -ரீ;ஸ்ா;நீ; | பா; -ரிமபநி-பமரீ-ரீ; ||
; ; ; * எக்;குவ; -நீ . - . . . -வ . நி; | ; ; -தி;க்கு;ல; | பொ;-க . . . -ட . . -க; ||

ஸா ; ; * ரீ ரீ;ரீ;ரீ; -ஸா;ரீ; -மா; | பா;பா;பா;நீ; | மா;பா; ; ; ; ; ||
; ; * அக் க;ர;கொ;-நி; ம; -தி; | சொக்;கி;க;நு; | கொந்; ந; ; ; ; ; ||

'நிக்கமு.........சக்கதனமுகல'—அநுபல்லவிபோலப் பாடவேண்டும்.
மற்ற சரணங்களையும் இப்படியே பாடவேண்டும்.

மதுரைக் கோவை

[121-வது பக்கத் தொடர்ச்சி]

படைத்துமொழி கிளவி

கருங்குஞ் சரமுரித் தோர்கடம் பாடவிக்
காமர்வெற்பைப்
பொருங்குங் குமந்திகழ் தோளண்ண லேபுடை
போயடங்கா
நெருங்கும் பணைமுலைக் காற்றுத நுண்ணிடை
நேரிழைக்கோர்
மருங்குந் தரவல்லை யோமணி மாளிகை
வாங்குதற்கே. 121.

அறியே னென்றல்

சுருப்பார வார மருமது ராபுரிச்
சொக்கர்வெற்பில்
மருப்பாயு மாளிகைத் தோளண்ண லேவண்ட
[1]லாட்டயர்ந்து
திருப்பாவை கோடி யிருப்பா ரெனுமித்
தெரிவையரில்
விருப்பா யவரெவ ரோதிரு மேனி
மெலிவதற்கே. 122.

அறியே னென்றவட் கறி[ய]வுரைத்தல்

செல்லாறு சோலைத் திருவால வாயர்
சிலம்பில்வல்லி
நல்லா யுனையன்றி யாரறி வார்நளி
னரவிந்தைக்
கல்லார மைக்கண் கடைக்கே கிடக்குமென்
காதலென்பால்
நில்லாது சென்றவர் பின்னே யலம்வரு
நெஞ்சமுமே. 123.

பெருமையிற் பெயர்த்தல்

மல்லற் பழன வயல்மது ரேசர்
வரையிலுலம்
புல்லப் பொருத புபத்தண்ண லேமுறை
பூண்டதங்க
ளில்லத் தவரன்றி யென்போல் பவரு
மினையவெல்லாஞ்
சொல்லச் சிறியனன் றேயெம்மை யாளுஞ்
சுரிகுழலே. 124.

குலமுறை கிளத்தல்

உலம்பார்த்த தோளண்ணல் நீயர சாள்வ
தொருகுலமெங்
குலம்பார்க்கி லென்ன குலமுறைப் போங்குறு
மூரல்கொண்டு
வலம்பார்த்த செஞ்சிலை யார்சொக்க நாதர்
மதுரையிலிச்
சிலம்பார்க்குஞ் சீறடி வல்லி யெவ்வாறுனைத்
தீண்டுவதே. 125.

குலமுறை கிளந்தற் கெதிர்மொழி கொடுத்தல்

உண்ணு வுவரி யமுதமுத் தாரமு
மும்பருக்கு
மண்ணுளும் வேந்தர்க்கும் வீறல்ல வோமது
ரேசர்வெற்பிற்
பண்ணுகி வண்டயி ரின்பய னுகுமிப்
பாவையுமோர்
பெண்ணு ரமுதல்ல வோபிறப் போவின்று
பேசுவதே. 126.

உலகுரைத் தொழித்தல்

கடம்பா[ர்]த்த வெங்களிற் றூர்கடம் பாடவிக்
கானல்முத்த
வடம்பா[ர்]த்த மாளிகைத் தோளண்ண லேகடல்
மத்திட்டநாள்
விடம்பா[ர்]த்த கண்ணியு நீயுமெங் கேளிர்
விரும்புவதோ
ரிடம்பா[ர்]த்த பின்பல்ல வோகொண்ட காத
லிணங்குவதே. 127.

வரைவு மறுத்தல்

கரும்பயர்க் குங்கனி வாய்வல்லி பால்வைத்த
காதலுக்குப்
பெரும்பணைத் தோளி வரைவுநன் றேயிளம்
பேடணைத்துச்
சுரும்பரற் றுந்தொங்க லார்மது ராபுரிச்
சொக்கர்வெற்பிற்
பொரும்படைக் கின்றரும் பும்பனை யாமுன்
புனைந்துரையே. 128.

அருமையி னகற்சி

மின்னங் கொடியை யருகக லார்பெற்ற மெல்லியலா
ரென்னம்பி யென்னை யிரந்துநின் றுயிமை யோர்பரவு
மன்னஞ் சலிபுரி வார்மது ரேசர் வளைத்தெடுத்த
பொன்னஞ் சிலைவெற்ப னேதமியேனென் புகலுவதே.

தலைவன் ஆற்றதுரைத்தல்

மலையுஞ் சிலைகுனிப் பார்மது ரேசர்
வரையிலிந்த
வலையுங் குழலியு மஞ்சலென் னுள்விர
கானலத்தால்
நிலையுந் தளர்ந்தொரு பாவிநெஞ் சேசென்று
நின்றநின்றீர்ங்
குலையுந் தயாவுனக் கெத்தனை நாளென்
றுணர்கிலமே. 130.

அவளறிவுறுத்துப் பின்வாவென்றல்.

கானேர் சடையர் கடம்பா டவியிடைக்
கங்குல்வந்து
போநேர நீவரு நேரம்வந் தாலென்
பொலன்கொடியைத்
தேனே திரைபெற்ற தெள்ளமு தேயென்று
சென்றிரந்து
நானே தொடுத்தணி வேனண்ண லேயுன்
னறுந்தழையே. 131.

நின்துறை நீயே கூறென்றல்.

தேன்போது மாலைத் திருவால வாயர்
திசையளக்குங்
கான்போ தணிகடம் பாடவி யார்பொற்
கரத்திருக்கு
மான்போலுங் கண்ணி மனம்போல நின்றொரு
வார்த்தைசொல
நான்போது மோநண்ப னேயுனைப் போல
நலம்புனைந்தே. 132.

தலைவனைப் பேதைமை யூட்டல்.

காதமை சங்கக் குழைபாளர் சொக்கர்
கடம்பவனத்
தேதமை வாவென் றறிகிலை யேயுன
தெண்ணிறந்த
சூதமை கல்விப் பரப்பிது வோமுன்
றுணிந்ததெல்லாம்
பே[ை]தமை யோவண்ண லேயினி யானென்கொல்
பேசுவதே. 133.

இளமைத்தன்மை கூறல்

நீரிற் குளிப்பித்து வண்டலம் பாவையை
நீர்புகுந்து
வாரித் தருகில தென்றழு வாள்மது
ரேசர்வெற்பில்
வேரித் தொடையண்ணல் நீகொண்ட காம
விரகுக்கிவ
ளாரித் தரமுமுண் டோகொண்ட காத
லறிபவரே. 134.

இளையவ ளென்றவட் கெதிர்மொழி கூறல்

துளவுக் கிணங்கு முகில்தொழு வார்சொக்கர்
சூடிமதிப்
பிளவுக் கிணங்குந் திருநுத லாயிவள்
பெண்பருவத்
தளவுக் கிளையவ ளானுறு மால
மளந்தவிழிக்
களவுக் கிளமையுண் டோவென்கொ னீசொன்ன
கட்டுரையே. 135

விளைவில ளென்றல்

நீயளிப் பாய்கட லேமணப் பாவைய
நின்னையுமென்
றுயளிப் பாளென்று தான்முனி வாளன்பர்
தங்கள்வினைத்
தீயழிப் பார்தந் திருவால வாயுறை
செம்மலுற
வாயளிப் பாளிவ ளோகொண்ட காதல்
வருந்துயரே. 136.

(பிரதி)-1. பாடடரிந்து.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—2. அநுமப் படலம்

[127-வது பக்கத் தொடர்ச்சி]

எதுவென் றுணர முதனு லுதவும்.

எனின், வாயுவின் மைந்தன் தான் என்று செப்பிய அவ்வானரத்தின் வாசகத் தகவயின் இராமன் சிறப்புறக் கண்டு கொண்டாடியதற்கு உரிய காரணம் ஒன்றும் கம்பரது பாசுரங்கள் காட்டவில்லை. சொற்றிரமும் பொருட்செறிவும் யாதும் இன்றி இங்ஙனம் செப்பினனே இவ்வொரு மாணியின் படிவத்தோன் என்று இராமன் வஞ்சப் புகழ்ச்சியாகவே அத்துணை பேசினனென்ன மதித்தல் அழகன்று. பரிகசித்திகழ்கின்றவன் இராமன் அல்லன், இப்பொழுது அவன் அந்நிலையிலும் இல்லை. அல்லது, இராமன் வியப்பிய இந்தக் கரையற்ற புகழ்ச்சிற்கும் வியப்பிற்கும் இலக்காயிருக்கும்படி அநுமன் கூறிய பாசுரங்கள் சில, இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கின்ற 'கம்பராமாயணத்தில்' எக்காரணத்தினாலேனும் விடுபட்டுப் போயினவோ, என்ன எண்ணப் புகுங்கால், செய்யுள்களின்தொடர்ச்சிமுறை அந்த ஐயத்திற்கு இடந்தருதல் அருமையாயிருக்கின்றது. அல்லது, "மாற்றமஃது", "இல்லாத வுலகத்தெங்கும்", "மாணியாம் படிவமன்று" "மற்றுமிவ் வுலகத்துள்ள" எனத் தொடங்குகின்ற இந்த நான்கு செய்யுள்களும் பிறரெவராலேனும் பின்னர்ப் படைத்துச் செருகப்பெற்றவெள்ளிப் பாட்டுக்களோ? வரன்முறைத் தொடர்ச்சியை நோக்குங்கால், இந்நான்குசெய்யுள்களும் இல்லாமலே பாசுரங்கள் இயற்கையுற நடத்தல்கூடுமென்பதும் புலனாகின்றது. "எம்மலைக்குலமுந் தாழ இசைசுமந்து எழுந்த தோளானாகிய அநுமன், விம்மலுற்று அனையான் (சுக்ரீவன்) ஏவ வினவிய வந்தேன்," என்று கூறியவுடன் இராமன், "எவ்வழியிருந்தான் சொன்ன கவிகுலத்தரசன்" என்று கேட்கின்ற பாசுரம் நேருறத் தொடர்தல் இயலும். ஆதலின், இந்நான்குசெய்யுள்களும் ஒருகால் இடைச்செருகல்கள் தாம் ஆகுமோ என்று ஐயுறுவதற்குத்தொடர்ச்சிமுறையாதும் இடையூறு செய்யவில்லை என்னுமளவு உணரலாம். ஆயின், இந்தச் செய்யுள்களைப் புதிதுபாடி இடைச்செருகச் சிலர் புக்கனராயின் அவ்வாறு அவர் இவைதாம்அவசியமென்று கருதநேர்ந்ததற்குக் காரணம் யாதேனும் இருத்தல் வேண்டும். இன்னதோர் செவ்வியில் முதனூலின் உதவியை நாடுதல் நலம். வான்மீகர் நூலில் இந்தப் பாகம் பின்வருமாறு கூறப்பெற்றிருக்கின்றது:—

புத்தியில் மிகுந்தவனாகிய அந்த ஸுக்ரீவன் சொன்ன வார்த்தைகளின் அபிப்பிராயத்தை ஹனுமான் தெரிந்துகொண்டு அந்த ருசியமூக பர்வதத்தினின்று இராமலக்ஷ்மணர்கள் இருக்குமிடத்திற்குப் போயினன். அனந்தரம் வாயுகுமாரனாகிய அந்த ஹனுமான் வஞ்சிக்கவேண்டுமென்னும் எண்ணமுடையவனாகையால் வானர உருவத்தை விட்டு ஸந்நியாஸிவேஷத்தைக் கொண்டனன். அப்பொழுது அந்த ஹனுமான் வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்களிடம் வணக்கத்துடன் சென்று பக்தி மிகுந்திருக்குமாறு நமஸ்காரஞ்செய்து மிருதுவாகி மிகவும் இனிதாகிய உரைகளைச் சொல்லி உள்ளபடியே அவர்களைப் புகழ்ந்தனன். வீரனாகிய அந்த வாயுகுமாரனான ஹனுமான் உண்மையான பராக்கிரமமுடைய அவ்விருவரையும் விதியின்படி பூஜித்துப் பக்தி தோன்றும்படி மெதுவான உரையுடன் சொல்லத் தொடங்கினன். 'ம்ருக ஸமூஹங்களையும் மற்றும்வனத்தில் ஸஞ்சரிக்கின்ற ஜந்துக்களையும் புதிய உமது உருவங்களால் தாத்திக்கொண்டு பம்பையின் கரையைச் சுற்றி நாற்புறத்திலும் முளைத்திருக்கின்ற விருக்ஷங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற உமதுஉருவம் அழகியதாகி நிகரின்றி ஒளிவீசப் பெற்றிருக்கின்றது. ஆகையால் நீங்கள் ராஜரிஷிகளைப்போலவும் தேவதைகளைப்போலவும் விளங்குகின்றீர்கள். இப்படிப்பட்ட நீங்கள் கொடிய விரதங்களில் முயன்று தாபஸவேஷந் தரித்துப் புகக்கூடாத இந்தப்பிரதேசத்திற்கு எப்படி வந்தீர்கள்? அழகிய ஜலமுடைய இந்தப் பம்பா நதியை உமது தேஜஸ்ஸினால் விளங்கச் செய்கிறீர்கள். தாபஸரது வேஷந் தரித்திருக்கிறீர்கள். நல்ல தைரியம்பொருந்திப் பொன்வர்ணம் அமைந்து மரவுரி உடுத்தி அடவியில் திரியும் ஆயாஸத்தினால் பெருமூச்செறிந்துகொண்டு அழகிய புஜங்கள் விளங்க, என்றுங்காணாத உங்கள் உருவத்தைக் கண்டு இந்தப் பக்ஷிகளும் மிருகங்களும் கலக்கமுற்றோடிப்போக, ஸிம்ஹம்போல் கம்பீரமானபார்வையுடன் ஸிம்ஹத்தை அதிக்கிரமித்தபலபராக்கிரமங்களோடுவிளங்குகின்றீர்கள். மேலும், நீங்கள் இந்திரதனுஸுபோன்றவில்லைக் கையில்பிடித்துப் பகைவரை யடக்குந் திறமுடையராகி ஒளிகொண்டு ரூபஸௌந்தர்யங்கள் துலக்கமுற்றுமேலான விருஷபம்போல் செருக்குபொருந்திய நடை மிடுக்குத்தோன்ற, யானையின் துதிக்கைபோல் நீண்டு பருத்த புஜமுடையவர்களாகித் தேஜஸுடன் பிரகாசிக்கின்றீர்கள். இப்படிப்பட்ட புருஷஸ்ரேஷ்டர்களாகிய நீங்கள் யாவர், உங்களது தேஹகாந்தியால் பர்வதராஜனாகிய இந்த ருஷியமுகம்பிரகாசிக்கின்றது. நீங்கள் தேவதைகளோடொத்த பராக்ரமமுடையராயிருக்கிறீர்கள்; ஆகையால் தேவலோகத்தினின்று வந்த வீரர்கள்போல் புலப்படுகிறீர்கள். மேலும், தாமரையிதழ் போன்ற கண்களுடையவரும் ஸௌந்தரியாதிகளில் ஒருவரை ஒருவர் நிகர்த்தவருமாகித் தெய்வாதீனமாய்ப் பூமிக்குவந்த சந்திர சூரியர்களைப்போல் விளங்குகின்றீர்கள். மேலும், விசாலவக்ஷஸ்தலமும்ஸிம்ஹத்தின் முசுப்புப்போல் உயர்ந்ததோள்களும் பொருந்தி மிக்க உற்சாகம் விளங்கப்பெற்று மதித்த வ்ருஷபங்கள்போல் துலங்கலுற்றுத் தேவதைகளைப்போன்ற உருவமுடைய மனுஷ்யவீரர்களாகிய நீங்களிருவரும் ஸமஸ்த ராஜலக்ஷணங்களும் அமைந்திருக்கின்றீர்கள்; ஆகையால் ராஜ்யத்திற்குஉரியராயிருந்தும் ராஜ்யத்தைத் துறந்து ஜடாமண்டலந் தரித்துஇந்த வனப்ரதேசத்திற்கு என் வந்தீர்கள்? உங்களது புஜங்கள் முழந்தாள் வரையிலும் நீண்டு பாம்பின் உடல்போல் உருண்டு இருப்புத்தடிகள்போலப் பலமும் உறுதியும் அமைந்து ஆபரணங்களுக்கும் ஆபரணங்கள்போன்றிருக்கின்றனவே. இப்படிப்பட்ட புஜங்களைப் பூஷணங்களால் ஏன் அலங்கரியாதிருக்கிறீர்கள்? நீங்களிருவரும் ஸமுத்ரத்தினால் சூழப்பட்ட ஸகல வனங்களோடுங் கூடி விந்த்யம் மேரு முதலிய பர்வதங்களும் உடையதாகி விளங்கும் இந்தப் பூமண்டலம் அனைத்தையும் பாதுகாப்பதற்கு உரியவரென்று யான் நினைக்கின்றனன். பார்வைக்கு ஆச்சர்யமும் ஸௌந்தரமும் அற்புதமும் பொன்னால் பூசப்பட்டவையுமாகிய இந்தத் தனுஸ்ஸுக்கள் ஸ்வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்ட இந்த்ரனது ஜெராயுதங்கள்போலப் பிரகாசிக்கின்றன. பார்க்க இனியவைகளாயிருக்கின்ற இந்த அம்பறாத் தூணிகளில் மூச்செறிகின்ற ஸர்ப்பங்கள் போல் பிராணனை முடிப்பவைகளும் பயத்தை விளைப்ப

வைகளுமாகிய கூரான பாணங்கள் நிறைந்திருக்கின்றன. மிக்க விசாலமானவைகளும் தங்கத்தினால் அலங்கரிக்கப்பட்டவைகளுமாகிய இந்தக் கத்திகளிரண்டும் தோலுரித்த ஸர்ப்பங்கள்போல் பிரகாசிக்கின்றன. நான் இப்படி அடிக்கடி வினவிக்கொண்டிருப்பினும் நீங்கள் என் மறுமொழி கூறாதிருக்கின்றீர்கள்? தர்மாத்மாவும்வீரனுமாகிய ஸுக்ரீவனென்னும் ஓர் வானரர் தலைவன் தன் தமையனால் வஞ்சனையாக வெளித்துரத்தப்பட்டுத் துக்கத்தினால் பூமியில் திரிந்துகொண்டிருக்கின்றனன். வானரஸ்ரேஷ்டர்களுக்கெல்லாம் அரசனும் மஹானுபாவனுமாகிய ஸுக்ரீவனால் அனுப்பப்பட்டு நான் இவ்விடம் வந்தனன். நான் ஹனுமானென்னும் பேருடைய வானரன். தர்மாத்மாவாகிய ஸுக்ரீவன் உங்களோடு ஸ்னேகஞ்செய்துகொள்ள விரும்புகின்றனன். நான் ஸுக்ரீவனுடையமந்த்ரி. வானரனும் வாயுகுமாரனுமாக என்னை அறிவீர்களாக. 'ஸந்நியாஸி எப்படி ஆனாய் என்கிறீர்களோ? நான் ஸுக்ரீவனுக்குப் பிரியஞ்செய்ய விரும்பி இந்தப் பிக்ஷுரூபத்தினால் மாறுவேஷம்பூண்டு ருஷியமூக பர்வதத்தினின்று இவ்விடம் வந்தனன். நான் நினைத்த இடம் போக வல்லவனென்றும், நினைத்த வடிவங் கொள்ள வல்லவனென்றும் அறிவீர்களாக' என்றனன். ஹனுமான் பேசுவதில் நிபுணன் ஆகையால் வார்த்தை சொல்லுவதில் வல்லவர்களாகிய ராமலக்ஷ்மணர்களை நோக்கி இங்ஙனஞ்சொல்லி மேலொன்றுஞ் சொல்லாமல் மௌனமாய் இருந்தனன். ஸ்ரீமானாகிய ராமன், ஹனுமான் சொன்ன அந்த வார்த்தைகளைக்கேட்டு முகத்தில் ஸந்தோஷம் விளங்க அருகேயிருக்கின்ற லக்ஷ்மணனைப் பார்த்து 'இவன் மஹானுபாவனாகிய அந்தக் கபிராஜ ஸுக்ரீவனுடைய மந்திரி. அந்த ஸுக்ரீவனையே பார்க்க விரும்புகின்ற என்னிடம் இவன் மூலமாக அவனே வந்தனன். இலக்ஷ்மணா! சத்துருக்களையழிக்க வல்லவனே! ஸுக்ரீவனது மந்திரியும் பேசுவதில் நிபுணனுமாகிய இந்த வானரன் என்னிடத்திலும் ஸுக்ரீவனிடத்திலும் சிநேஹமுடையவன். இவனோடு நீ மதுர வசனங்களைப் பேசுவாயாக. ருக்வேதத்தில் அப்யாஸமில்லாதவனுக்கும் யஜுர்வேதத்தை உணராதவனுக்கும் ஸாமவேதமறியாதவனுக்கும் இங்ஙனம் பேசுவதுஎவ்விதத்திலும் ஸாத்யமன்று. அவைகளன்றியும் இவன் இலக்கணமெல்லாம் பலவாறு நன்றாகப் படித்திருக்கின்றனன். இது வாஸ்தவம். ஏனென்றால், இவன் இத்தனை நேரம் எத்தனை வார்த்தை சொன்னபோதிலும் அதில் சிறிதாயினும் அபசப்தம் அகப்படவில்லை. இவன் பேசிக்கொண்டிருக்கையில் இவன் முகத்திலாவது கண்களிலாவது நெற்றியிலாவது புருவங்களிலாவது மற்றுமுள்ள அவயவங்களிலாவது எதிலாவது எள்ளளவும் விகாரம் புலப்படவில்லை. மேலும், இவனுடைய இந்த வார்த்தைகள் சப்த விஸ்தரமின்றிப் பதவர்ண ஸந்தேகமுமின்றி மிக்க விளம்பமும் மிக்க வேகமும் இல்லாமல் மார்பில் தோன்றிக் கம்பீரஸ்வர முடையதும் கண்டத்தில் வெளிப்பட்டு நடுத்தரமுமாகி அவ்விரண்டிற்கும் இடையில் மிக்க உரப்பும் மிக்கதாழ்வுமின்றி விளங்குகின்றது. இவன் வியாகரண ஸம்ஸ்காரத்தினால் சப்த சுத்தியுடன் பதங்கள் தெளிவாகவும் அக்ஷரங்கள் தனித்தனியே ஸ்பஷ்டமாகவும்இருக்கப்பெற்று விரைவும்மெதுவுமின்றி மற்றுமுள்ள குணங்களும் நிறைந்து மனத்திற்கு இனிதாக இருக்குமாறு மங்களகரமான வாக்கியங்களைக் கூறுகின்றனன். அக்ஷரங்கள்வெளியாகும் ஸ்தானமாகிய மார்பு கண்டம் சிரஸ்ஸு ஆகிய இம் மூன்று இடங்களில் நிலையுற்றிருக்கும் உதாத்த அனுதாத்த ஸ்வரிதங்களென்னும் ஸ்வரங்களோடுகூடி வியப்பை விளைக்கின்ற இவனது வார்த்தைகளைக் கேட்கையில், வெட்டுவதற்காக வாளை யுருவிக்கையில் ஏந்தி இருக்கின்ற பகைவனாயிருப்பினும் அவனுடைய மனமும் கொடுமை நீங்கி ஸந்தோஷம் அடையாதிராது. பாபமற்றவனே! (நம்மைப் புகழும் வ்யாஜத்தினாலேயே நமது குலகோத்ராதிகளை யெல்லாம் வினாவினேன்.) இப்படி வினவும்படியான ஸமர்த்தன் எந்த அரசனுக்குத் தூதனாயிருப்பானோ, அவ்வரசனுக்குக் காரியங்கள்எங்ஙனம் கைகூடாது போகும்? இப்படிப்பட்ட குண கணங்கள் பொருந்திக் காரியங்களை ஸாதிக்குந் தூதர் எந்த ராஜனுக்கு இருப்பார்களோ, அந்த ராஜனது காரியங்களெல்லாம், அவனுக்குச்சிரமமின்றி அந்தத் தூதரது வாக்கியமூலமாகவே ஸித்திபெறும்' என்று மொழிந்தனன். இங்ஙனம் ராமன் மொழியக்கேட்ட லக்ஷ்மணன் தான் வார்த்தைசொல்வதில் வல்லவனாகையால், ஸுக்ரீவனது மந்திரியும் வாக்யங்களை யறிந்தவனும் வாயுகுமாரனுமாகிய அந்த வானரனைப் பார்த்து 'அறிஞனே! மஹானுபாவனாகிய ஸுக்ரீவனது குணங்கள் எமக்குத் தெரிந்திருக்கின்றன. வானரர் தலைவனாகிய அந்த ஸுக்ரீவனையே நாங்களும் இப்பொழுது தேடிக்கொண்டிருக்கின்றனம். மிகுந்த நன்மையுடையவனே! ஹனுமானே! நீ இப்பொழுது ஸுக்ரீவனது கட்டளையினால் யாது சொல்லினையோ, அதை அம்படியே நடத்துகின்றோம்' என்றனன். அனந்தரம் வாயுகுமாரனாகிய அந்த வானரன், லக்ஷ்மணன் நிபுணமாகச் சொன்ன வார்த்தையைக் கேட்டு மிகவும் ஸந்தோஷமுற்று வாலியைவெல்லும் உபாயத்தைப் பற்றி மனத்தில் நிச்சயித்துக்கொண்டு அந்த ராமலக்ஷ்மணர்களோடு ஸுக்ரீவனுக்குச் சிநேஹம் பண்ணுவிக்க விரும்பினன்."

இன்னவாறு முதனூலில் அனுமன் இராமலக்ஷ்மணர்தம் நலன்களைப் பலபடி எடுத்துப் பேசியிருக்கின்றான். ஆதலின் இராமனால் வியந்து பாராட்டப்படுவதற்கு வேண்டிய வாசகங்கள் அனுமனது கட்டுரையில் அடங்கிருந்தன. அவ்வடமொழியிலும், அனுமன் மொழிந்தவைகளில் உள்ள பொருட் சிறப்பைக் காட்டிலும், ஒலியின் நயமும் குரலின் சேர்மையும், சொற்களை இயம்பும் முறையும், அவயங்களின் அமைதியும் அனைய விடயங்களே இராமனால்புகழ்ந்து கொண்டாடப் பெறுகின்றன. வியாகரண அறிவும் வேதப் பயிற்சியும் அனுமன் பெற்றிருந்தானென்பதை, செவ்வியமொழிகளை அவன் செவ்விய முறையில் இயம்பிய நீர்மையே இராமனுக்குக் காட்டித் தந்தது.

ஆதலின், தமிழ் நூலினும், 'இவன் சொல்லாலே தோன்றிற்று' என்றும், "இவன்மொழிக்கெதிர்முதல்வராய பெற்றியர் மூவர்க்கேயும் போற்றல் அரிது" என்றும் அனுமனது சொற்றிறத்தை வியப்பதோடு இராமன் நின்றிருப்பானாயின், அனுமனுக்குரிய புகழ் வடநூலை விஞ்சாமற் காக்கப்பெற்றிருக்கலாம். வடநூலிற்போல அநுமன் இங்கு அதிகம் பேசவில்லையாயினும், பேசிய அளவிலே, அவனது ஒலியின் தூய்மையையும் குரலின் இனிமையையும் சொற்களின் நேர்மையையும் இராமன் தெளிந்துகொண்டு அவ் வியப்பின் உவகையை இலக்குவனுக்குத் தெரிவித்தான் எனக் கருதலாம். மற்று, இராமனோ அவ்வளவோடு நிகற்கவில்லை. வடமொழி எட்டடி பாய்ந்தால் இத்தமிழ்நூல் பதினாறடி பாய்கின்றது. அனுமனின் செவ்வியோர் இன்மைதேறினான். அவனதுஆற்றலும் நிறைவுங் கல்வியும் அமைதியும் அறிவும் வியக்கப் பெறுகின்றன. சொல்லின் செல்வனா யிருத்தலோடு விரிஞ்சனோவென்றும் விடைவலானோவென்றும் கருதப்பெறுகின்றான். இத்துணைச் சிறப்பு [illegible] வனுமனுக்கு வாய்த்த தெங்ஙன [illegible]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

செட்டிநாட்டுக்

கலாநிலயக் கல்விக் கழகம்.

இக் கழகத்தின் அடுத்த வகுப்பு, கானாடுகாத்தானில் மே மாதம் 26, 27-ம் தேதிகளிற் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை.)

அவ்விரு தினங்களிலும் மாலை 6 மணிக்குக் காரைக்குடியில், S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B.A., B.L., கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

* * *

புகைப்படப் புதுமை:—புகைபடத்தொழிலில் ஒரு புதிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பிரதிபிம்பம் மட்டுமில்லாமல் உலோகத்தைக்கொண்டு பிரதிமையாகவே ஒருவரின் உருவத்தைப் புகைப்படமெடுக்க ஒரு வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் 'பிரீம்' என்று பெயர். கல்கத்தாவில் இதற்காகப் புதிய கம்பெனி ஒன்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு உருவத்தைப் படமெடுக்க 100 ரூபாயாகும். இக்கம்பெனியை இங்கு ஏற்படுத்தச் சென்ற ஆறு வாரங்களாக டேவிட் டேஹட் என்றவர் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் ஊருக்குப் புறப்படுகையில், இந்தியாவில் இந்தப் புகைப்படப் புதுமைக்கு விசேஷ ஆதரவிருக்குமெனத் தெரிவதாகவும் புதிய கம்பெனியில் பிரபல இந்தியரும் ஐரோப்பியரும் நிர்வாகஸ்தர்களாக விருப்பார்கள் என்றும் இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் வேலை மும்முரமாக நடக்குமென்றும் கூறினர்.

* * *

புதிய மணமக்கட்கு வசதி:—ஐரோப்பாவில் ஒரு கலியாணம்நடந்தால் கலியாணவைபவங்கள் முடிந்ததும் மணமக்களைத் தனியாக உல்லாச வாழ்க்கைக்கு அனுப்பிவிடுவார்கள். அவர்களும் அப்படியேதங்களுக்கு விருப்பமான இடத்திற்குச்சென்று மகிழ்ச்சியாகச்சில மாதங்கள் கழிப்பார்கள். அதற்கு 'ஹனிமூன்' என்று பெயர். இத்தாலி நாட்டில் மே மாதம் 18ந் தேதி முதல் ஜூன் மாதம் 30ந்தேதி வரையில் மார்கெட் என்னும் நகருக்கு வரும் ஹனிமூன் தம்பதிகளுக்காக அங்கு நல்ல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்குவரும் தம்பதிகளுக்குநகரசபைத்தலைவர் தனிவரவேற்பு அளிப்பார். நகரில்நடக்கும்எல்லா வேடிக்கைகளிலும் கலந்துகொள்ள அவர்களுக்கு இலவச அனுமதி உண்டு. நகர சபையார் நடத்தும் எல்லா விழாக்களுக்கும் அவர்கள்போகலாம். மோட்டாரிலும் 'ஈகிள்' என்ற கப்பலிலும் இனமாக உல்லாசப்பிரயாணம் செய்யலாம். இது போலவே இத்தாலிய நாட்டுக்கு வருகிற புது மணமக்களுக்கு ரயிலில் அரைக் கட்டணமும் மற்ற வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

* * *

விவாக ரத்து விநோதம்:—அமெரிக்கா நியூ ஜெர்ஸி பிரதேசத்தைச்சார்ந்தவைல்டுவுட் என்னும் இடத்தில் ஜான்கெல்லி என்பவரும் அவர் மனைவியும்நெடுங்காலம் வசித்துவந்தார்கள். சுமார் 55வருடகாலம் வரை அவர்கள் சுகமாகவே இல்லறம் நடத்தி வந்தார்கள். ஆனால் சமீபத்தில் அவர்கள் விவாக ரத்து செய்து கொள்ள வழக்கு நடத்தினார்கள். வழக்கு கோர்ட்டில் ஆரம்பமானதும், ஸ்ரீமதி கெல்லி தன்னைத் தனது புருஷன் மகா கொடுமையாய் நடத்துவதாகக் கோர்ட்டில் கூறினாள். அந்நேரத்தில் அவள் தனது கணவரின் முகத்தை உற்று நோக்கினாள். வழக்கு நடவடிக்கைகளையெல்லாம் மறந்துவிட்டாள். "ஜான், இவை யாவும் நமது தவறுதான்" எனப் புருஷனை நோக்கிக் கூறி அழ ஆரம்பித்தாள். புருஷன் மனைவியைத் தழுவிக் கொண்டார். இருவருமாகச் சமாதானமாக வீடு திரும்பினார்கள். இவர்களுக்கு வயது என்ன தெரியுமா? புருஷனுக்கு 78. மனைவிக்கு 76. இவர்கள் இருவரும் புதிதாக மணஞ் செய்து கொண்ட இளந் தம்பதிகளைப் போலக் கோர்ட்டிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் அவர்களின் 19மக்களும் பின்தொடர்ந்து ஆனந்தமாக வந்துகொண்டிருந்தார்கள்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras.
OR
R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras.
OR
R. G. DAS & Co., Managers.

கோடையின் கொடுமை
நீங்கள், ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.
5 துலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)